# சுதேச வாசகம்

## மூன்றாம் புத்தகம்

(திருத்திய பதிப்பு)

(ஆரம்பப் பாடசாலைப் புதிய பாட நிர்மாணத் திட்டப்படி தயாரித்தது)


**வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,**
அவர்கள் குமாரர்

**வி. சு. சுவாமிநாதன்**
தொகுத்தது

சென்னை, சர். எம். சிடி. முத்தையாச் செட்டியார்
உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்

**வித்துவான், பி. எஸ். சண்முகம் பிள்ளை**
திருத்தியது.



**வி. சு. சுவாமிநாதன்**
பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு, மதுரை. | பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை.



[பதிப்புரிமை] :: [விலை ரூ. 0-7-0

திருத்திய முதல் பதிப்பு-1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

ஆரம்பப் பாடசாலைகளின் புதிய பாடத்திட்டப்படி, சுதேச வாசகம் மூன்றும் புத்தகம் வெளியிடப் பெற்றுள்ளது. பாடங்கள் யாவும், நம் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கும், தற்காலச் சூழ்நிலைக்கும், இவ்வகுப்புமாணவரின் அறிவுத் திறத்திற்கும் ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன. புதுச் சொற்களைச் சிரமமின்றிக் கற்பிக்கத் தக்க முறையிலேயே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

பாடத்தில் கற்ற விஷயங்களை மனத்திற்கொள்ளுமாறு செய்வதற்குரிய விளுக்களுடன், மொழிப் பயிற்சிக்கும் இலக்கணப் பயிற்சிக்கும் தேவையான கேள்விகளும் ஒவ்வொரு பாடத்திலும் தரப்பட்டுள்ளன. சில எளிய பாட்டுக்களும், கதைப் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தில் ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையவர்களது சில பாட்டுக்களைச் சேர்த்துக் கொள்ள இசைவு அளித்த பிள்ளையவர்களுக்கு எம் நன்றி உரித்தாகும்.

இந் நூலைத் திருத்தியமைப்பதில் எமக்கு உதவிய ஸ்ரீ வித்துவான், எஸ். முத்து ஐயங்கார் அவர்களுக்கு எமது நன்றி.

ஆசிரியர்கள்.

# தேச வணக்கம்

## (கும்மி மெட்டு)

ஓங்கும் இமாசலம் ஒளிமுடியாம் ; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம் ;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே ! உனக்கு நமஸ்காரம். 1

கண்டங்க ளெங்கும் காணும்நற் காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை ! உனக்கு நமஸ்காரம். 2

நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வள மும்நகர் சாரும்சிறப்பச்
சீர்வளமும் மிகத் திகழும் இந்தியச்
செல்வி ! உனக்கு நமஸ்காரம். 3

ஞாலமெங் கும்வெகு காலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி ! உனக்கு நமஸ்காரம். 4

—வே. முத்துசாமி ஐயர்.

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ் எழுத்துக்களின் வரிசை | ... | 8 |
| 2. | தமிழ்மொழி வாழ்த்து (பாட்டு) | ... | 9 |
| 3. | சிறுமியின் தாய்மொழிப் பற்று | ... | 10 |
| 4. | பனையும் ஆலும் | ... | 13 |
| 5. | நவராத்திரி விழா | ... | 16 |
| 6. | வாழ்விக்கும் மழை | ... | 18 |
| 7. | சோம்பேறிப் பையன் (பாட்டு) | ... | 21 |
| 8. | பேராசையின் விளைவு | ... | 23 |
| 9. | ஔவையாரின் அருட் செயல்கள் | ... | 26 |
| 10. | கயிறு திரித்தல் | ... | 29 |
| 11. | உப்பு | ... | 31 |
| 12. | நெற்பானையும் எலியும் (பாட்டு) | ... | 34 |
| 13. | பாரதியார் | ... | 36 |
| 14. | படப் பயிற்சி–I (சிங்கத்தின் நன்றி) | ... | 39 |
| 15. | கொசு (பாட்டு) | ... | 40 |
| 16. | வேடனை ஏமாற்றிய புறாக்கள் | ... | 41 |
| 17. | கடற்கரையும் துறைமுகமும் | ... | 44 |
| 18. | இயேசு கிறிஸ்துநாதர் | ... | 48 |
| 19. | பருத்திச் செடி | ... | 51 |
| 20. | காந்தியடிகளும் ஹரிஜனங்களும் | ... | 54 |
| 21. | மலர்கள் (பாட்டு) | ... | 57 |
| 22. | அதிவீரராம பாண்டியர் | ... | 58 |
| 23. | தேசிங்கு ராஜன் | ... | 61 |
| 24. | இரு கடிதங்கள் | ... | 65 |
| 25. | படப் பயிற்சி–II (நாயின் நல்லறிவு) | ... | 67 |
| 26. | அடக்கம் பெருமை தரும் | ... | 68 |
| 27. | உபகாரம் வீண் போகாது | ... | 71 |
| 28. | பாதுஷாவின் நேர்மை | ... | 75 |
| 29. | கொன்றை வேந்தன் | ... | 77 |
| 30. | வெற்றிவேற்கை | ... | 79 |

தமிழ்

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

வடமொழி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜ் | ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ |
| ஸ் | ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ |
| ஷ் | ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ |
| க்ஷ் | க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷு | க்ஷூ |
| ஹ் | ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ |

எழுத்துக்கள்

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |

எழுத்துக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜெ | ஜே | ஜை | ஜொ | ஜோ | ஜௌ |
| ஸெ | ஸே | ஸை | ஸொ | ஸோ | ஸௌ |
| ஷெ | ஷே | ஷை | ஷொ | ஷோ | ஷௌ |
| க்ஷெ | க்ஷே | க்ஷை | க்ஷொ | க்ஷோ | க்ஷௌ |
| ஹெ | ஹே | ஹை | ஹொ | ஹோ | ஹௌ |

# 1. தமிழ் எழுத்துக்களின் வரிசை

எழுத்து என்பது எழுதப்படும்பொழுது வரிவடிவமாகவும் உச்சரிக்கப்படும் பொழுது ஒலி வடிவமாகவும் இருக்கும். தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்களை எல்லாம் நீங்கள் தெரிந்துகொண்டிருப்பீர்கள்.

தமிழ் எழுத்துக்கள் நான்கு வகைப்படும்.

1. **உயிர் எழுத்துக்கள்** பன்னிரண்டு. அவை : **அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.**

2. **மெய் யெழுத்துக்கள்** பதினெட்டு. அவை : **க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.** உயிர் எழுத்துக்களைத் தனியாக உச்சரிக்க முடியும். ஆனால் மெய் யெழுத்துக்களைத் தனியாக உச்சரிக்க முடியாது. உயிர் எழுத்துக்களுடன் சேர்ந்தால் தான் மெய்யெழுத்துக்களை உச்சரிக்கமுடியும். 18 மெய் யெழுத்துக்களையும் 12 உயிர் எழுத்துக்களுடன் தனித் தனியே சேர்க்கும் பொழுது உயிர்மெய் யெழுத்துக்கள் தோன்றுகின்றன.

3. **உயிர்மெய் யெழுத்துக்கள்** இருநூற்றுப் பதினாறு. **க்** என்ற மெய்யெழுத்து உயிர் எழுத்துக்களுடன் சேரும் பொழுது **க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ** என்ற பன்னிரண்டு உயிர் மெய் யெழுத்துக்கள் உண்டாகின்றன. இதேபோல் பிற மெய் யெழுத்துக்களும் உயிர் எழுத்துக்களுடன் சேரும்.

4. **ஆய்த எழுத்து** ஒன்று. இது மூன்று புள்ளி வடிவமான ஃ என்ற எழுத்து.

எனவே தமிழ் மொழியில் மொத்தம் 247 எழுத்துக்கள் உள்ளன. இவற்றையெல்லாம் அட்டவணையில் பாருங்கள்.

## 2. தமிழ்மொழி வாழ்த்து

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே.

2. வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே.

4. எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

5. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே.

6. தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே.

7. வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே.

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே.

*—பாரதியார்.*

## 3. சிறுமியின் தாய்மொழிப் பற்று

நாம் பேசுவது தமிழ் மொழி. இம்மாதிரியே ஒவ்வொரு நாட்டவரும் ஒவ்வொரு மொழியைப் பேசுகிருர்கள். அவரவர்களுக்குத் தங்கள் மொழி தாய் மொழியாகும். தாய் மொழியை விட்டு அயல் மொழியிலேயே எப்பொழுதும் பேச யாருக்கும் மனம் துணியாது.

சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பு ஜெர்மானியர், தமது நாட்டுக்கு அருகிலுள்ள **ஆல்ஸாஸ் லோரைன்** என்னும் சிறு நாட்டைப் பிடித்தனர். ஜெர்மன் சக்கரவர்த்தியாய் இருந்த கெய்ஸர், லோரைன் மக்களைக் கடுமையாய் நடத்த ஆரம்பித்தார். லோரைன் மொழியில் ஒருவரும் பேசக் கூடாது என்றும் ஜெர்மன் மொழியில்தான் பேச வேண்டும் என்றும் கண்டிப்பாக உத்தரவு இட்டார். இவ்வுத்தரவை மீறியவர் கடுமையாய்த் தண்டிக்கப்பட்டனர்.

லோரைன் நாட்டினர் யாவரும் வருத்தத்துடன் தம் தாய் மொழியை விட்டு ஜெர்மன் மொழியையே பேசி வந்தனர். பள்ளிக்கூடங்களில் அரசாங்க மொழியாகிய ஜெர்மன் மொழியையே கற்பித்தார்கள். ஆனுல் ஜெர்மானியாருக்குத் தெரியாமலே பலர் தம் தாய் மொழியை மறக்காமல், இரவில் தமக்குள் பேசி வந்தனர். தம் தாய்மொழியை மறக்க யார்தான் விரும்புவார்கள் ! இவ்வாறு முப்பது ஆண்டுகள் சென்றன.

ஒரு சமயம் ஜெர்மன் சக்கரவர்த்தினியான **கெய்ஸரினி**, லோரைன் நாட்டிலுள்ள ஒரு பெண்பாடசாலைக்குச் சென்ருர். அப்பள்ளிக்கூடத்திலும் ஜெர்மன் மொழி மட்டுமே கற்பிக்கப்பட்டு வந்தது. கெய்ஸரினியைக் கண்டதும் ஆசிரியைகளும் சிறுமிகளும் ஜெர்

மன் மொழியில் வணக்கங் கூறினர். கெய்ஸரினியும் சிறுமிகளைப் பரிட்சித்தார். அவரது கேள்விகளுக் கெல்லாம் தவருது ஒரு சிறுமி விடையளித்தாள். அது கண்டு மகிழ்ந்த கெய்ஸரினி அச்சிறுமியை நோக்கி, "குழந்தாய்! உன் அறிவை மெச்சினேன். உனக்கு என்ன வேண்டும்? சொல், தருகிறேன்," என்ருர்.



அதுகேட்ட சிறுமி, "தாயே! எனக்கு வேண் டியது ஒன்றிருக்கிறது. அதைத் தாங்கள் உறுதியாய்க் கொடுக்க முடியுமோ?" என்று கேட்டாள். கெய் ஸரினி இதைக் கேட்டுச் சிறிது சினத்துடன், "தைரிய முள்ள சிறுமியே! நீ யாருடன் பேசுகிருய் தெரியுமா? ஜெர்மன் சக்கரவர்த்தினியான நான் நீ எது கேட் டாலும் தருகிறேன், கேள்!" என்ருர்.

உடனே சிறுமி முழந்தாளிட்டுக் கண்ணீர் விட்டு, "தாயே! எந்த மொழியை நாங்கள் பேசக்கூடாது என்று உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த எங்கள் தாய் மொழியை நாங்கள் பேச உக்காவ

கொடுக்க வேண்டும். பள்ளிக்கூடங்களிலும் எங்கள் தாய் மொழியிலேயே பாடங்கள் நடக்க வேண்டும். இதுதான் எனது வேண்டுகோள்'' என்று பணிவுடன் வேண்டினுள்.

கெய்ஸரினி இதைக் கேட்டுச் சிறுமியின் தைரியத்தையும் மொழிப்பற்றையும் மெச்சினுர். கெய்ஸரிடம் நடந்ததைச் சொல்லி சிறுமியின் வேண்டுகோளின் படியே உத்தரவுகள் போடச் செய்தார். ஒரு சிறுமியின் மொழிப்பற்றிஞல் அந்நாட்டிற்கே நன்மை ஏற்பட்டது.

நாமும் நம் தாய் மொழியான தமிழ்மொழியைக் கற்று அதை வளர்க்கப் பாடுபடவேண்டும்.

புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| மெச்சினேன் | மீறியவர் | சக்கரவர்த்தி(னி) |
| வணக்கம் | தண்டிக்க | கடுமையாய் |
| அரசாங்க | கண்டிப்பாய் | தைரியமுள்ள |
| முழந்தாளிட்டு | வேண்டுகோள் | பாடுபட |

கேள்விகள்

1. தாய்மொழி என்ருல் என்ன ?
2. லோரைன் நாட்டினர் என்ன செய்யக் கூடாது என்று ஜெர்மன் சக்கரவர்த்தி உத்தரவிட்டார்?
3. சிறுமி சக்கரவர்த்தினியினிடம் வேண்டிக் கொண்டது என்ன ?

பயிற்சி

I. மனிதர், தேவர், உயிருள்ள பொருள்கள், உயிரில்லாத பொருள்கள் இவற்றில் ஒன்றையோ ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ குறிக்கும் சொல்லுக்குப் பெயர்ச் சொல் என்று பெயர். ஒரு பெயர்ச் சொல் ஒரு பொருளைக் குறித்தால் ஒருமை எண் எனவும், ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறித்தால் பன்மை எண் எனவும் சொல்லப்படும்.

II. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு. அவை ஒருமையா பன்மையா என்றும் கூறு :—

1. பள்ளியில் மாணுக்கர் படித்தார்கள்.
2. சிறுமியர் சக்கரவர்த்தினியை வணங்கினுர்கள்.

[illegible] ... காக்கிச் சென்றன.

# 4. பனையும் ஆலும்

பங்குனி மாதம் பகல் பன்னிரண்டு மணிக்கு ஒரு பனங்காட்டின் நடுவே வாலிபன் ஒருவன் போய்க் கொண்டிருந்தான். வெயில் கடுமையாக இருந்தது. அவனுக்கோ பசி அதிகம். ஒரு பனையின் கீழே ஒரு திரண்ட பனம் பழத்தைக் கண்டான். அதை எடுத்தான்; பனையின் சிறிய நிழலில் இருந்து அதைத் தின்ன நினைத்தான். ஆனால் அந்நிழல் அவனுக்குப் போதுமானதா யில்லை. அதனால் அவன் மனம் வருந்தி,



"தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே,"

என்று தான் பாடத்தில் படித்த பாட்டை நினைத்துக் கொண்டே அவ்விடம் விட்டுப் புறப்பட்டான்.

சிறிது தூரம் சென்றதும் ஒரு பெரிய ஆலமரத்தைக் கண்டான். அதன் நிழலில் அமர்ந்து இளைப்பாறினான். ஆலமரத்தின் பரந்த கிளைகளையும் குளிர்ந்த நிழலையும் கண்டு வியந்தான். அப்பொழுது வெயில் அதிகமாயிருந்த படியால் அவ்வழியாய் வந்தவர்களும், அக்கம்பக்கத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர்களும், ஆடு மாடுகளுடன் அவற்றை மேய்ப்பவர்களும் அந்தக் குளிர்ந்த நிழலில் வந்து தங்கினர். சிறுவர்களும் ஓடியாடி விளையாடினர். பலவிதப் பறவைகள் அம்மரத்தின் கிளைகளில் கூடு கட்டியிருந்தன.

இவைகளைக் கண்டு மகிழ்ந்த அவன்மீது ஒரு ஆலம் பழம் விழுந்தது. அதை எடுத்துப் பிளந்து அதன் விதைகளை நோக்கினான்; நோக்கியதும்,



"தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே,"

என்ற பாட்டை நினைத்தான்.

"நூற்றுக் கணக்கான மக்களும் பிராணிகளும் தங்கும் ஆலமரத்திற்குப் பழத்தைப் பெரியதாக வைத்திருந்தால், யார் மேலாவது விழுந்து காயப்படுத்துமல்லவா? அதனால் இம்மரத்தின் நிழல் யாருக்கும் உபயோகமில்லாது போகுமே! இதனால்தான் கடவுள் இப்பெரிய மரத்திற்குச் சிறிய விதையை ஏற்படுத்தினார் போலும்," என்று கடவுளது படைப்பின் பெருமையைப் புகழ்ந்து கொண்டே சென்றான்.

### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| பெருமையை | திரண்ட | தெள்ளிய |
| இளைப்பாறினன் | அமர்ந்து | கயம் |
| காயப்படுத்தும் | படைப்பின் | தேம்படு |
| வியந்தான் | வானுற | அண்ணல் |
| புரவி | வாலிபன் | நுண்ணிதே |
| | பரந்த | |

### கேள்விகள்

1. வெயில் அதிகமாயிருக்கக் கூடிய மாதம் எது?
2. பனையைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.
3. ஆலமரத்தின் உபயோகங்களைப்பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.
4. ஆலம்பழத்தையும் பனம்பழத்தையும் ஒப்பிட்டு இரண்டு வாக்கியங்கள் எழுது.

### பயிற்சி

I. பின்வரும் பெயர்ச் சொற்களுக்கு ஒருமை, பன்மை கூறு :—

வாலிபன், பழம், சிறுவர்கள், கிளைகள்.

II. பின்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி :-

திடீரென, கொடுமை, பெருமை, பிளந்து.

III. முதல் வரிசையில் மரங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை இரண்டாம் வரிசையிலிருந்து எடுத்துச் சேர் :—

| | |
|---|---|
| பனைமரம் | இளநீர் |
| ஆலமரம் | அகன்ற இலை |
| தென்னை மரம் | நுங்கு |
| வாழை மரம் | விழுது |



# 5. நவராத்திரி விழா

புரட்டாசி மாதம் பிறந்து விட்டாலே பெண் குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்தான்; நவராத்திரி விழா வரப் போவதைக் கருதி அவர்கள் புதுப் பொம்மைகள் வாங்குவார்கள். பழைய பொம்மைகளைத் துடைத்துச் சரிப்படுத்துவார்கள். தாம் அணிவதற்குப் புது உடைகள் வேண்டுமென்று பெற்றோரிடம் கேட்டு, அவற்றைத் தயார் செய்துகொள்வார்கள்.

நவராத்திரி முதல் நாள் வீட்டில் ஓரிடத்தில் தட்டுத் தட்டாகப் பல படிகள் அமைத்து, அவற்றில் பொம்மைகள் அழகாக அடுக்கப்படும். இதற்குக் கொலு என்று பெயர். பெண்கள் புத்தாடைகளை அணிந்து, கொலுவுக்கு முன் அமர்ந்து பாட்டுப் பாடுவார்கள். கொலுவைப் பார்க்கத் தம் நண்பர்களை எல்லாம் அழைப்பார்கள். பெரியோர்களும் இதில் கலந்து கொள்வார்கள்.

நவராத்திரியைக் கலைவிழா என்று சொல்லலாம். பொம்மைகள் செய்வோரின் சிற்பத் திறமையும் ஓவியத் திறமையும் இந்த விழாவினால் வளர்கிறது. மாதர்களின் இசைக் கலை வளர்ச்சியடையவும் இவ்விழா உதவுகிறது.

நவராத்திரி விழாவின் கடைசி நாள் சரஸ்வதி பூஜை அல்லது ஆயுதபூஜை என்ற நாளாகும். எல்லா விதக் கல்வி கலைகளுக்கும் தெய்வமாகிய சரஸ்வதியை வழிபடும் நாள் அது. அந்த நாளில் எல்லாத் தொழிலாளரும் தத்தம் தொழிற்கருவிகளுக்குப் பூஜை செய்வர். கல்வி கலைகளையும் எல்லாத் தொழில்களையும் நாம் நன்கு மதிக்கவேண்டும் என்பதையே இந்த விழாநாள் வற்புறுத்துகிறது.

சரஸ்வதி பூஜைக்கு மறுநாள் விஜயதசமி. அன்று தொடங்கிய காரியமெல்லாம் வெற்றியடையும் என்பது நமது நம்பிக்கை. பூஜை செய்த கருவிகளை அன்று எடுத்துக்கொண்டு எல்லாரும் தம்முடைய தொழில்களைத் தொடங்குவார்கள். " உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் " என்று பாரதியார் பாடியிருப்பதையே நாம் ஆயுதபூஜை நாளில் செய்கிறோம்.

புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| கொண்டாட்டம் | கொலு | ஓவியம் |
| சரிப்படுத்து | கலைவிழா | இசைக்கலை |
| புத்தாடை | சிற்பம் | வழிபடும் |
| மதிக்க | வற்புறுத்து | வந்தனை |

கேள்விகள்

1. நவராத்திரிக்குமுன் பெண் குழந்தைகள் என்ன தயார் செய்வார்கள்?

2. நவராத்திரி விழாவினுல் என்ன நற்பயன்கள் ஏற்படுகின்றன?
3. ஆயுதபூஜை யன்று என்ன செய்கிறோம்?
4. விஜயதசமி யன்று தொழில் தொடங்கினுல் என்ன கிடைக்கும்?

பயிற்சி

I. சில சொற்கள் தொடர்ந்து வந்து ஒரு கருத்து முடிந்தால் அதற்கு ஒரு வாக்கியம் என்று பெயர். வாக்கியம் முடிந்ததைக் காட்ட ஒரு புள்ளியிடவேண்டும். அதற்கு முற்றுப் புள்ளி என்று பெயர். நீங்கள் படித்த பாடங்களிலும், படிக்கவிருக்கும் பாடங்களிலும் ஒரு வாக்கியம் முடிந்தவுடன் முற்றுப் புள்ளி யிருப்பதைப் பாருங்கள்.

II. பின்வரும் சில வாக்கியங்களை முற்றுப்புள்ளியிட்டுப் பிரித்துக் காட்டு :

தென்னை உயர்ந்து வளரும் இதற்குக் கிளைகள் இல்லை பாளையில் தேங்காய் காய்க்கும் வெயிற்காலத்தில் நாம் இளநீர் குடிக்கலாம்

# 6. வாழ்விக்கும் மழை

மழை பெய்வதை நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். எப்படி மழை பெய்கிறது ? ஆகாயத்தில் தண்ணீர் ஏது?

தண்ணீரில் நனைந்த துணியை நாம் நிழலிலும் வெயிலிலும் உலரவைக்கிறோம்; துணியிலுள்ள தண்ணீர் கீழே விழவில்லை; ஆனுல் துணியிலிருந்து மறைந்து விட்டது. தண்ணீர் எங்கே போய்விட்டது ? சூரிய வெப்பத்தினுல் துணியிலுள்ள தண்ணீர் ஆவியாகமாறி, காற்றில் கலந்து விட்டது. தண்ணீரை ஒரு பாத்திரத்தில் கொதிக்க வைத்தால் தண்ணீர் ஆவியாக மாறி மேலெழுந்து போவதைக் காணலாம். அந்த ஆவி படும்படி ஒரு கற்பலகையைப் பிடி. அந்தக் கற்

பலகையிலிருந்து தண்ணீர் சொட்டுச் சொட்டாக விழுவதைப் பார்க்கலாம்.

உலகத்தின் மேற்பரப்பு சுமார் மூன்று பாகம் நீராகவும், ஒரு பாகம் தரையாகவும் இருக்கிறது. சூரிய வெப்பத்தினுல் நீர்நிலைகளிலுள்ள தண்ணீர் ஆவியாக மாறுகிறது. இந்த நீராவி காற்றைவிட இலேசானது. ஆகையால் நீராவிகலந்த காற்று, நீராவியில்லாத காற்றைவிட இலேசாகி உயரச் செல்கிறது. காற்று மேலே செல்லும் பொழுது குளிர்ச்சி அடைகிறது. போதுமான அளவு குளிர்ச்சி அடைந்தால், காற்றிலுள்ள நீராவி சிறு நீர்த்துளிகளாகி மேகம் உண்டாகிறது.மேன்மேலும் காற்று குளிர்ச்சியடைந்தால், மேகத்திலுள்ள நீர்த்துளிகள் பருமனுகி மழையாகப் பெய்கிறது.

அடிக்கடி மலைகளின்மேல் மழை பெய்வதால் நீரூற்றுக்களும், ஓடைகளும், நதிகளும் உற்பத்தியாகின்றன. இவற்றிலுள்ள தண்ணீர் விவசாயம் செய்யவும், ஜீவராசிகள் குளிக்கவும், குடிக்கவும் உதவுகிறது. மழையில்லாவிட்டால், பூமியிலுள்ள நீரூற்றுக்கள் வறண்டுபோகும். தண்ணீர் இல்லாது விவசாயம் நடக்காது. எங்கும் பஞ்சம் ஏற்படும். ஜீவராசிகள் உயிர் வாழ முடியாது. தண்ணீர் எவ்வளவு இருந்தாலும், மழையில்லாவிட்டால் பயிர் வகைகள் தகுந்த பலனைக் கொடுக்கா. இது பற்றியே ''மழை முகம் காணுப் பயிர் போலவும்'' என்று நாம் சொல்லுகிரேம்.

புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| நீர் நிலைகள் | பருமன் | பஞ்சம் |
| ஆகாயத்தில் | கிளம்பும் | வறண்டு |
| பிரதேசங்கள் | பெய்வதை | உற்பத்தி |
| வெப்பம் | ஊற்றுக்கள் | ஆவியாக |

## கேள்விகள்

1. மழை எப்படி உண்டாகிறது?
2. மழையினுல் நாம் அடையும் பயன்கள் யாவை?

## பயிற்சி

I. சேர்த்து ஒரே வாக்கியமாக எழுது :

1. தண்ணீர் தரையின்மேல் விழுகிறது. தண்ணீர் சுத்த மாகிறது.

2. நீர் வெப்பத்திஞல் ஆவியாகிறது. ஆவி மேக மாகிறது.

II. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :-

1. நீராவி காற்றைவிட ———. (இலேசானது, கன மானது.)

2. மழை நீர் தரையில் விழுந்த பிறகு ———. (சுத்தமா கிறது, அசுத்தமாகிறது.)

3. நீராவி ——— மேகமாகிறது. (உஷ்ணமாகி, குளிர்ந்து.)

III. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற் களில் ஒருமையைப் பன்மையாகவும், பன்மையை ஒருமையாக வும் மாற்றி வாக்கியங்களை எழுது:-

1. மாடுகள் மேய்கின்றன.

2. எங்களுடைய தோட்டங்களில் மரங்கள் இருக் கின்றன.

# 7. சோம்பேறிப் பையன்

சோம்பித் திரியேல் என்றௌவையார் சொல்லிய
சொல்லை மறந்த ஓர் சின்னப் பையன்
சோம்பித்திரிந்து பள்ளிக்கூடம் போவதைச்
சுத்தமாய் மறந்து விட்டனனே. 1

நல்ல பிள்ளைகளின் சேர்க்கை யில்லாமலே
நாள்தோறும் சுற்றித் தெருத் தெருவாய்
மெல்ல மெல்லக் கற்ற நல்ல வழக்கத்தை
விட்டு விட்டான் அவன் கெட்டு விட்டான். 2

தந்தையும் தாயாரும் சொல்லிய சொற்களைத்
தட்டி நடக்கவும் ஆரம்பித்தான்.
எந்தவிதம் சொல்லிப் பார்த்தாலும் மூளையில்
ஏறுத சோம்பேறி யாகிவிட்டான். 3

பள்ளிக்கூடம் போகும் நேரம் வரையிலும்
பாயிற் படுத்துப் புரண்டொரு நாள்
அள்ளிப் போட்டுக் கொஞ்சம் சாப்பிட்டதும் விளை
யாடப் புறப்பட்டான் வேடிக்கையாய். 4

நாய் ஒன்றைக் கண்டதைக் கூப்பிடவே அது
' நான் வரமாட்டேன், ஐயா!' என்றது.
ஈ யொன்றைக் கண்டவன் கூப்பிடவே அது,
' எனக்கும் வேலை உண்டு' என்றதுவே. 5

சிற்றெறும் பொன்றினைக் கண்டவன் தன்னோடு
சேர்ந்து விளையாடக் கூப்பிட்டனன்.
சிற்றெறும்பும், ' பையா நான் செய்யும் வேலைகள்
தீர்ந்ததும் பேசுவோம்,' என்றதுவே. 6

பூக்களில் புகுந்த தேனீயைக் கண்டவன்
பொழுதைப் போக்கிடக் கூப்பிடவே
'ஊக்கம் இல்லாத ஓர் சோம்பேறியோடு நான்
ஒன்றுமே பேசிடேன்,' என்றதுவே. 7

"தேனீயும் எறும்பும் நாயும் ஈயுமே
சேர்ந்தென் னுடன்விளை யாடவில்லை.
நானே மிகக் கெட்ட சோம்பேறி என்றிவை
நன்ருகப் புத்தி கற்பித்தனவே. 8

"இன்று முதலாய் நான் தேனீயைப் போலவும்
எறும்பைப் போலவும் உழைத்திடுவேன்.
நன்று நன்றென்னவே நல்லவர் வாழ்த்திட
நானும் உயர்வு பெறுவேனே," 9

என்று துணிந்தவன் வீடு திரும்பினன்
இன்பமுறக் கல்வி கற்க எண்ணி.
அன்று முதலே நன்ருய் உழைத்ததால்
ஆனந்த வாழ்க்கை அடைந்தனனே. 10

நா. கனகராஜ ஐயர்.

புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| *சோம்பித்திரி* | *சோம்பேறி* | *துணிந்து* |
| *சேர்க்கை* | *திர்ந்ததும்* | *பேசிடேன்* |
| *தட்டிநட* | *போக்கிட* | *இன்பமுற* |

கேள்விகள்

1. *சோம்பேறிப் பையனுக்கு எறும்பு என்ன பதிலளித்தது?*
2. *தேனீ பையனிடம் கூறியது என்ன?*
3. *ஈ, எறும்பு முதலிய பிராணிகள் பையனுக்கு என்ன புத்தி கற்பித்தன?*

# 8. பேராசையின் விளைவு

பாசூர் என்ற கிராமத்தில் பரமன், ராமன் என்ற இரு விறகு வெட்டிகள் இருந்தனர். பரமன் தனக்குக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு திருப்தி அடைவான். தினந்தோறும் தான் கொண்டுவரும் விறகுக் கட்டை நியாயமான விலைக்கு விற்று, தன் குடும்பத்தைக் காப்பாற்றிச் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தான். ஆனால் ராமனோ தன்னுடைய விறகுக்கட்டை அதிகமான விலைக்குத்தான் விற்பான். அப்படி விற்றும் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இன்னும் அதிகப்பணம் கிடைக்க வில்லையே என்று வருத்தப்படுவான்.

ஒரு நாள் பரமன் வழக்கம்போல் விறகு வெட்டப் பக்கத்திலுள்ள காட்டுக்குச் சென்றான். ஒரு ஏரிக்கரையிலிருந்த பட்டுப்போன மரம் ஒன்றைத் தன் கோடரியால் வெட்ட ஆரம்பித்தான். அவ்வாறு வெட்டும்போது, அவனது கோடரி கை நழுவி ஏரிக்குள் விழுந்து விட்டது. கோடரி யில்லாமல் எப்படி விறகு வெட்டித் தன் குடும்பத்தைக் காப்பாற்றுவது என்று நினைத்து அழுதுகொண்டிருந்தான். அப்பொழுது அக்காட்டில் இருந்த வனதேவதை, அவன்முன் தோன்றி, "அப்பா! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது. அதற்குப் பரமன், "தாயே! என்னுடைய கோடரி இந்த ஏரியில் விழுந்து விட்டது. இனிமேல் விறகு வெட்ட முடியாதே என்று நினைத்துத்தான் அழுகிறேன்" என்றான்.

அதைக் கேட்ட வனதேவதை உடனே ஏரியில் மூழ்கி, ஒரு தங்கக் கோடரியைக் கொண்டுவந்து காட்டி, "அப்பா! இதுவா உன் கோடரி?" என்று கேட்டது. அதைக் கண்ட பரமன், "அம்மணி! இது என்னுடையதல்ல" என்றான். மறுபடியும் வனதேவதை ஏரியில்

மூழ்கி, ஒரு வெள்ளிக் கோடரியைக் கொண்டுவந்து காட்டியது. பரமன், "இதுவும் என்னுடையதல்ல," என்ருன். பிறகு வனதேவதை மூன்ரும் முறையாக, அவனுடைய இரும்புக் கோடரியையே கொண்டுவந்து காட்டியது. அதைக் கண்டதும் பரமன் மகிழ்ந்து, "அம்மா! இதுவே என் கோடரி," என்று கூறி, அதை வாங்கக்



கையை நீட்டினுன். வனதேவதையும் அவனுடைய நல்ல குணத்தைக் கண்டு அவனுக்கு அம் மூன்று கோடரிகளையும் கொடுத்து மறைந்தது. பரமனும் தங்கக் கோடரியையும் வெள்ளிக் கோடரியையும் விற்றுச் சுகமாக வாழ்ந்தான்.

இந்தச் செய்தியைக் கேட்ட ராமன், பொருமை கொண்டு தானும் அவ்வாறே செய்து பணக்காரனுக ஆசைப்பட்டான். அதே ஏரிக்கரைக்குச் சென்று, தன்

கோடரியை ஏரியில் எறிந்துவிட்டு அழ ஆரம்பித்தான். வனதேவதையும் அவன் முன் தோன்றியது. முன் போலவே ,ஒரு தங்கக் கோடரியைக் கொண்டுவந்து காட்டியது. பேராசை பிடித்த ராமனே அது தன்னுடைய தல்லவென்று சொல்லவில்லை. " அம்மா ! இதுதான் என்னுடைய கோடரி" என்று பொய் கூறி ஆசை யோடு அதை வாங்கக் கையை நீட்டினன்.

உடனே வனதேவதை அவனை நோக்கி, " அடே ! நீ உன் கோடரியை ஏரியில் வேண்டுமென்றே போட்டு விட்டு, தவறிவிட்டது என்று பொய் கூறினய். இப்போது இந்தத் தங்கக் கோடரி உன்னுடையது என்று பேராசையுடன் வாங்கக் கை நீட்டுகிருய். நீ பெரும் பொய்யன் ; பேராசைக்காரன். ஆகையால் உனக்கு உன்னுடைய இரும்புக் கோடரியும் கிடைக் காது; போய்விடு, " என்று கூறி மறைந்துவிட்டது. ராமன் அதிக ஆசைப்பட்டதனுல் தன்னுடைய கோடரி யையும் இழந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினன்.

புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| செய்தி | வெட்டி | தவறி | கோடரி |
| குடும்பம் | பொருமை | தேவதை | மூழ்கி |
| நியாயமான | திருப்தி | நழுவி | பட்டுப்போன |

கேள்விகள்

1. பரமனுடைய கோடரி எப்பொழுது ஏரியில் விழுந்தது?
2. வனதேவதை பரமனுக்குத் தங்கக் கோடரியையும் வெள்ளிக் கோடரியையும் ஏன் கொடுத்தது ?
3. ராமனுடைய கோடரி ஏன் ஏரியில் விழுந்தது?
4. ராமன் எப்படித் தன் கோடரியையும் இழந்தான்?
5. இக்கதையிலிருந்து நீ தெரிந்துகொண்டது என்ன?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களைச் சேர்த்துப்படி :-

1. பரமன் உண்மை சொன்னதால் தேவதை ———. (கோபித்தது, மகிழ்ந்தது)

2. பேராசை உள்ளவர்கள் ——— அடைவார்கள். (இலாபம், நஷ்டம்)

II. மாதிரியில் காட்டியபடி, வாக்கியத்துக்குப் பொருத்தமாகப் பூர்த்தி செய் :—

1. நான் விறகு வெட்டுகிறேன்.
2. நீ விறகு ———.
3. அவன் விறகு ———.
4. அவர்கள் விறகு ———.
5. நீங்கள் விறகு ———.

# 9. ஔவையாரின் அருட் செயல்கள்

ஔவையார் பண்டைத் தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்த ஒரு பெரும் புலவர். அரசர்களும் இவரை மரியாதையுடனும் அன்புடனும் நடத்தினார்கள். அரசர்களுக்குள் ஏற்படும் சச்சரவுகளில் இவரே பல தடவைகள் சமாதானம் செய்திருக்கிறார். இவர் நெடுங்காலம் உயிரோடிருந்தால் உலகத்திற்கு நன்மை ஏற்படும் என்று பலர் நினைத்தார்கள். ஒரு சமயம் **அதியமான்** என்னும் அரசனுக்கு ஓர் அரிய நெல்லிக்கனி கிடைத்தது. அதைத் தின்றவர் நெடுநாள் உயிரோடிருக்கலாம். இந்தக் கனியை அதியமான் தான் உபயோகித்துக்கொள்ளாமல் ஔவையாருக்குக் கொடுத்தான். ஔவையாரும் அதை உண்டு நெடுநாள் வாழ்ந்திருந்தார்.

ஒரு கிராமத்தில் ஒரு வீட்டின் கொல்லையில் ஒரு பலாமரம் இருந்தது. அதைச் சிலர் வெட்டினர். அந்த மரத்திற்குச் சொந்தக்காரியான குறப்பெண் அதற்காக

மிகவும் வருத்தத்துடன் அழுதுகொண்டிருந்தாள். ஔவையார் இதைக்கண்டு வருந்தி ஒரு பாட்டுப் பாடினார். மரம் தளிர்த்து வளர்ந்து ஓங்கி நின்றது.

ஒரு நாள் ஔவையார் மிகுந்த பசியோடிருந்தார். அவரது பசியாற ஒரு வேளாளன் கஞ்சி வார்த்தான். அவனுடைய கஷ்டம் தீரும்படி ஔவையார் ஒரு பாட்டுப் பாடினார். அவன் தரித்திரம் நீங்கிச் செல்வம் பெற்று நெடுங்காலம் வாழ்ந்து வந்தான்.



ஒரு சமயம் ஔவையார் குளிரால் மிகவும் கஷ்டப்பட்டார். ஒரு கொல்லர் தம் உலைப்பக்கமாய் ஔவையாரை உட்காரச்செய்து குளிரைப் போக்கி, அவருக்கு வேண்டிய உதவிகள் செய்தார். சில நாட்களில் கடல் கரைபுரண்டு வந்து அந்த ஊரை அழிக்க ஆரம்பித்தது. ஔவையார் அக்கொல்லருடைய வீடும் உலையும் அழியாதிருக்கப் பாடினார். அப்படியே அவ்விரண்டும் அழியாமல் தப்பின.

இப்படியே பல அருட் செயல்களை ஔவையார் இவ்வுலகத்தில் செய்து புகழ் பெற்ருர். ஔவையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலிய பல அரிய நூல்களும் செய்துள்ளார்.

புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| நெடுநாள் | தரித்திரம் | புகழ் | புலவர் |
| குறப்பெண் | அத்தாட்சி | அழிக்க | கொல்லை |
| நெல்லிக்கனி | உலகத்திற்கு | செயல்கள் | சகியாமல் |
| சொந்தக்காரி | செல்வத்துடன் | சச்சரவு | அரிய |

கேள்விகள்

1. ஔவையார் நெடுங்காலம் உயிரோடிருந்ததற்குக் காரணம் என்ன?
2. ஔவையார் குறப்பெண்ணுக்கு என்ன செய்தாள்?
3. ஔவையாருக்குக் கஞ்சி வார்த்த வேளாளனுக்கு என்ன கிடைத்தது?
4. ஔவையாருக்கு உதவிய கொல்லர் என்ன நன்மை பெற்ருர்?

பயிற்சி

I. பின் வரும் சொற்களுக்கு எதிர்மொழிகள் கூறு :—
நீளம், துன்பம், பகல், பெரிது.

II. ஓரிடத்தில் என்ற சொல்லை ஓர்+இடத்தில் என்று பிரித்து எழுதலாம். பின் வரும் சொற்களை இதுபோல் பிரித்து எழுது :-

நாடெங்கும், உயிரோடிருந்தால்.

III. ஆடு மேய்கிறது. இந்த வாக்கியத்தில் ஆடு செய்கிற தொழிலை (அல்லது வினையை) மேய்கிறது என்ற சொல் தெரிவிக்கிறது. இது வினைச் சொல் எனப்படும். வினைச்சொல்லுக்கும் ஒருமை பன்மை உண்டு. மேய்கிறது-ஒருமை எண்.

IV. இப்பாடத்தில் மூன்றும் பாராவிலுள்ள வினைச் சொற்களை எடுத்து எழுது.

# 10. கயிறு திரித்தல்

(உரையாடல்)

**நாகசாமி :** கிணற்றிலிருந்து நீர் இறைக்க உதவும் இந்தக் கயிறு எவ்வளவு வலிமையா யிருக்கிறது, பார்த்தாயா ?

**கோபு :** ஆம் : இதை எப்படிச் செய்கிருர்கள் என்று உனக்குத் தெரியுமா ?

**நாகசாமி :** தெரியுமே !

**கோபு :** எனக்குத் தெரியாது. நீ சொன்ஞல் தெரிந்து கொள்கிறேன்.

**நாகசாமி :** நார் உரிக்காத தேங்காயைப் பார்த்திருக் கிருயா ?

**கோபு :** பார்த்திருக்கிறேன். ஒரு உளிபோன்ற இரும்பு முனையில் அந்தத் தேங்காயை அழுத்தி நாரை உரிப்பதையும் பார்த்திருக்கிறேன்.

**நாகசாமி :** ஆம். அந்த நாரிஞல்தான் இந்தக் கயிறு செய்யப்படுகிறது. உரித்த நார்களை நீரில் நன் ருக ஊறவைப்பார்கள். ஊறின நாரை ஒரு கல் லில் வைத்து ஒரு சுத்தியால் தட்டுவார்கள். இதஞல் நார் மிருதுவாகும். பிறகு அந்த நாரைச் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கையால் திரிப்பார் கள். கையால் திரிப்பதற்குப் பதிலாக, ஒரு சிறு கோலில் கல்லைக்கட்டி அதைச் சுழலச் செய்து கயிறு திரிப்பதும் உண்டு. இந்த மெல்லிய கயிறு கள் புரி என்று சொல்லப்படும். பிறகு இரண்டு மூன்று புரிகளைச் சேர்த்து முறுக்கித் தடித்த கயிறு களைச் செய்கிருர்கள்.



**கோபு :** நமது ஊர்த் தேரை இழுப்பதற்குப் பெரிய வடங்கள் இருக்கின்றனவே ; அவையும் தேங்காய் நாரினால் செய்யப்பட்டவையா ?

**நாகசாமி :** ஆம். அவையும் இந்தத் தாம்பைப் போலவே தான் முறுக்கப்படுகின்றன.

**கோபு :** சில கயிறுகள் வேறு மாதிரி நிறத்தோடு இருக்கின்றனவே. அது ஏன் ?

**நாகசாமி :** தேங்காய் நாரைத் தவிர வேறு நார்களைக் கொண்டும் கயிறுகள் செய்கிறார்கள். பனை நார், சணல் நார், முதலிய நார்களால் முறுக்கப்படும் கயிறுகள் வேறு நிறத்தோடிருக்கும்.

புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| *உரிக்காத* | *புரி* | *வடம்* |
| *சுத்தி* | *முறுக்கி* | *சணல்* |

கேள்விகள்

1. *தேங்காய் நாரைக் கொண்டு எப்படிக் கயிறு திரிக்கிறார்கள்?*
2. *கயிறுகள் செய்ய வேறு என்ன நார்கள் பயன்படுகின்றன?*

# 11. உப்பு

நமது ஆகாரத்தில் மிகவும் முக்கியமாக இருப்பது உப்பு. உப்பு இல்லாத எந்தப் பதார்த்தமும் ருசியாய் இராது. அதிக நாள் கெடாமல் இருக்க வேண்டிய பதார்த்தங்களுக்கு உப்பைச் சேர்க்கிறார்கள். இதனாலேயே 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்ற பழமொழி வழங்கி வருகிறது. உப்பு வெண்மை நிறமுள்ள ஒரு பொருள். அது தண்ணீரில் கரையக் கூடியது. இதனால்தான் நாம் உப்பை ஆகாரங்களில் சேர்க்க முடிகிறது.

உப்பு எடுக்கும் விதங்கள் இரண்டு. முதலாவது கடல் நீரிலிருந்து உப்பு எடுக்கப்படுகிறது. கடல் நீரைச் சிறு வாய்க்கால்கள் மூலம் உப்புச் செய்யும் இடத்திற்குக் கொண்டு போவார்கள். உப்புச் செய்யப்

படும் இடம், ஆழமில்லாத சிறு பாத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். வாய்க்கால் வழியாக வரும் கடல் நீரைச் சிறிது சிறிதாக இப்பாத்திகளில் நிரப்புவார்கள். பாத்திகளில் தங்கும் நீரெல்லாம் சூரிய வெப்பத்தினுல் சில நாட்களில் ஆவியாக மாறிப் போய்விடும். அதிலுள்ள உப்பெல்லாம் பாத்திகளிலேயே தங்கிவிடும். இவ்வுப்பை எடுத்து ஒன்ருகச் சேர்ப்பார்கள். சில நாட்கள் சென்றதும் அவைகளைக் குவியலாகக் குவித்து வியாபாரிகளுக்கு விற்பார்கள். இவ்வாறு உப்புச் செய்யும் இடங்களுக்கு உப்பளங்கள் என்று பெயர்.

நமது சென்னை ராஜ்யத்தில் கடற்கரை ஓரமாகப் பல உப்பளங்கள் இருக்கின்றன. எல்லா உப்பளங்களும் நமது அரசாங்கத்தார் வசமே இருக்கின்றன. இதற்காகவே பல உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு உப்பு இலாகா உத்தியோகஸ்தர்கள் என்று பெயர். வியாபாரிகள் அரசாங்கத்தாரிடமிருந்து மொத்தமாக உப்பை வாங்கி நமக்கு விற்கிருர்கள்.

இரண்டாவது, சில இடங்களில் நிலத்திலிருந்து உப்பு எடுக்கப்படுகிறது. பூமியில் பெரிய சுரங்கங்கள் வெட்டி உப்பு எடுக்கிருர்கள். ஆனுல் இவ்வுப்பு மண்ணேடும் வேறு அசுத்தங்களோடும் கலந்திருக்கும். ஆகையால் உப்பைத் தனியாய்ப் பிரித்துச் சுத்தம் செய்ய வேண்டும். இம்மாதிரி உப்புச் சுரங்கங்கள் ஐரோப்பாக் கண்டத்தில் பல இருக்கின்றன. நம் நாட்டில் ராஜபுதனத்திலும் உப்புச் சுரங்கங்கள் இருக்கின்றன.

நமது ஆகாரத்தில் உப்பைச் சேர்ப்பதால், தேகத்திலுள்ள எலும்புகள் பலப்படுகின்றன. உப்பு ஜீரண சக்தியை அதிகப்படுத்தும். உப்பு இல்லாவிட்டால் ஒரு

உணவுக்கும் ருசியில்லை. உப்பு இல்லாவிட்டால் உயிர் இல்லை. உப்பு அளித்தவன் உயிர் கொடுத்தவன். இதனால்தான் 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்ற பழமொழி வழங்குகிறது.

பதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| சத்து | காய்ச்சி | இலாகா |
| மூலம் | பழமொழி | பதார்த்தம் |
| ஆழம் | சுரங்கம் | உப்பளம் |

கேள்விகள்

1. கடல் நீரிலிருந்து உப்பு எப்படி எடுக்கப்படுகிறது?
2. உப்புச் சுரங்கம் என்பது என்ன?
3. உப்பு நமக்கு எவ்வாறு பயன்படுகிறது?

பயிற்சி

I. இப்பாடத்தில் வந்துள்ள பழமொழிகளை எழுது.

II. பின் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் ஒருமை, பன்மை கூறு:—

1. கடல் நீரை சிறு வாய்க்கால்கள் மூலம் உப்பளங்களில் பாயச் செய்வார்கள்.

2. உப்பு வெண்மை நிறமுள்ள ஒரு பொருள்.

3. உப்பு மண்ணோடும் வேறு அசுத்தங்களோடும் கலந்திருக்கும்.

III. மாதிரியில் காட்டப்பட்டுள்ளது போல் வாக்கியங்களைப் பூர்த்திசெய்:—

1. நாங்கள் நேற்று விளையாடினோம்.
2. நாங்கள் இப்பொழுது ———.
3. நாங்கள் நாளை ———.
4. நீங்கள் நாளை ———.
5. அவர்கள் ———.

IV. பின்வரும் வாக்கியங்களில் உள்ள தவறுகளைத் திருத்தி எழுது:-

1. மாம்பலத்தைக் கத்தியால் அருத்தான்.
2. விலையாட்டுப் பையன்கள் சன்டை போடுகிறார்கள்.
3. சிருவர்களும் சிருமிகளும் நன்றுகப் படிக்கிரார்கள்.
4. காளை மாளை பாடம் வாசி.
5. பெறியோரைத் துணைக்கொள்.
6. அவன் நள்ளவன்.

## 12. நெற்பானையும் எலியும்



பாட்டியின் வீட்டுப் பழம்பானை—அந்தப்
பானையும் ஒருபுறம் ஓட்டையடா
ஓட்டை வழியொரு சுண்டெலியும்—அதன்
உள்ளே புகுந்துநெல் தின்றதடா. 1

உள்ளே புகுந்துநெல் தின்றுதின்று—வயி
றூதிப் புடைத்துப் பருத்ததடா.
மெள்ள வெளியில் வருவதற்கும்—ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா. 2

பானையைக் காலை திறந்தவுடன்—அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்தவொரு

பூனை எலியினைக் கண்டதடா—ஓடிப்
போயதைக் கௌவியே சென்றதடா. 3



கள்ளவழியிற் செல்பவரை—எமன்
காலடி பற்றித் தொடர்வானடா
உள்ளபடியே நடப்பவர்க்குத் தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா. 4

—தேசிக விநாயகம் பிள்ளை.

## புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| ஊதி | புடைத்து | பருத்து |
| மெத்த | கௌவி | காலடி |
| உற்ற | தெய்வம் | தொடர் |

## கேள்விகள்

1. பழம் பானைக்குள் எலி எவ்வாறு புகுந்தது?
2. பானையில் எலி என்ன செய்தது?
3. எலி ஏன் பானையிலிருந்து வெளியே வர முடியவில்லை?
4. காலையில் பாட்டி பானையைத் திறந்ததும் எலி என்ன செய்தது? எதனிடம் அது அகப்பட்டுக் கொண்டது?
5. கள்ள வழியில் செல்பவருக்கு என்ன நேரும்?

# 13. பாரதியார்

தென்னிந்தியாவில் தென் கோடியிலிருப்பது திரு நெல்வேலி ஜில்லா. அதில் **கோவில்பட்டி** என்ற தாலூகாவில் **எட்டயபுரம்** என்ற ஓர் ஊர் இருக்கிறது. இது ஒரு ஜமீனுக இருந்தது. சுமார் ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்னே **சின்னச்சாமி** ஐயர் தம் மனைவியாகிய **லட்சுமி** அம்மாளுடன் அங்கு வாழ்ந்து வந்தார். இவர்களுக்கு 1882-ம் வருடம் ஒரு புதல்வர் தோன்றினுர். அந்தக் குழந்தைக்குச் **சுப்பிரமணியன்** என்று பெயரிட்டு அருமையாய் வளர்த்து வந்தனர். இவருடைய ஐந்தாவது பிராயத்தில் இவருடைய தாயார் இறந்தார்.

இவர் தமது ஐந்தாவது வயதில் பள்ளிக்கூடம் சென்றுர் ; படிப்பில் நல்ல ஊக்கம் காட்டினுர். இவரது ஏழாவது வயதில் இவரே சொந்தமாய்ச் சிறு பாட்டுக்கள் பாட ஆரம்பித்தார். இந்தச் சமயத்தில்தான் இவருடைய கவித்திறமையை அறிந்த புலவர்கள் இவரை **பாரதி** என்று அழைத்தனர். பாரதி என்ற சொல்லுக்குச் சரஸ்வதி என்பது பொருள். இதிலிருந்து இவருக்குப் **பாரதியார்** என்ற பெயரே வழங்கலாயிற்று.



பாரதியார் திருநெல்வேலியில் இந்துக் கல்லூரியில் சிறிது காலம் படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது இவர் சரமாரியாகக் கவிபாடுவார் என்று

எல்லோரும் பேசிக்கொள்வார்கள். கவியில் காள மேகம் என்பார்கள் இவரை. ஒருநாள் இவருக்குப் பாடம் தெரியவில்லை. உபாத்தியாயர் கோபங்கொண்டு "மேகம் பொழியட்டுமே" என்று கேலியாகச் சொன்ஞர். பாரதியார் உடனே தாமதமின்றி, "ஐயா! மேகம் அதற்கு விருப்பமான நேரத்தில் மழை பொழியுமே தவிர, தாங்கள் விரும்பும் நேரத்தில் பெய்யுமா! இது தங்களுக்குத் தெரியாததா?" என்று பதில் சொன்ஞர்.

சில நாட்களுக்குப் பிறகு இவருடைய தகப்பஞர் இறந்துவிட்டார். ஆகையால் இவர் ஐந்தாவது படிவத்திற்குமேல் படிக்க முடியாமல் போய்விட்டது. இவருடைய தகப்பஞரின் சகோதரி காசியில் இருந்தார். அந்த அம்மாள் இவரை வரவழைத்து அங்கே படிக்க வைத்தார். அங்கு இவர் ஹிந்தி, சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளைக் கற்ருர். முதல் பரீட்சையில் முதலாவதாய்த் தேர்ச்சி பெற்ருர். அப்பொழுது இவருக்குக் கலியாணம் ஆகியிருந்தது.

இவருக்கு இருபது வயதாகும்போதுதான், இவர் பிறந்த இடத்திற்குத் திரும்பி வந்தார். அங்கே ஜமீன்தாரிடம் சமஸ்தான கவியாயிருந்தார்: இவர் சுதந்திர வாழ்வில் பிரியமுள்ளவர். ஆகையால் இவர் சமஸ்தானப் பதவியைக் கைவிட்டு, மதுரையில் சிலமாதம் உபாத்தியாயராக இருந்தார். சிலகாலம் **இந்தியா, பாலபாரதம்** என்ற பத்திரிகைகள் நடத்திஞர். இதில் நம்நாட்டு விடுதலையின் அவசியத்தைப் பற்றித் தீரமாய் எழுதிஞர். அதஞல் அரசாங்கத்தார் இவரைக் கைது செய்ய முயற்சித்தனர். உடனே இவர் தம் குடும்பத்துடன் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமா யிருந்த **புதுச்சேரிக்குச்** சென்று அங்குப் பத்து வருடம் காலங்கழித்

தார். பின்பு சென்னையில் **சுதேசமித்திரன்** என்ற பத்திரிகைக்கு உதவி ஆசிரியராய் வேலைபார்த்து வந்தார்.

ஒரு தடவை யானை ஒன்றுக்கு விளாங்கனி கொடுக்கப் போனார். அது மதம் கொண்டிருந்த படியால் இவரைக் காலால் மிதித்துவிட்டது. அதிலிருந்து நோய்வாய்ப்பட்டு 1921-ம் வருடம் செப்டம்பர் மாதம் இறந்தார்.

இவர் பல தேசீயப் பாட்டுக்கள் பாடியிருக்கிறார். அவைகளை எல்லாம் சேர்த்துப் பெரிய புத்தகங்களாக அச்சிட்டிருக்கிறார்கள். இவருக்கு இரண்டு பெண்கள் உண்டு. அவர்களில் இளைய மகளுக்காகப் பாடிய பாட்டுத்தான் பாப்பாப் பாட்டு. சுப்பிரமணிய பாரதியாரை நாம் நன்கு மதித்து அவரைப்போல் தமிழில் முன்னேற்றமடைய வேண்டும்.

புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| விளாங்கனி | சுயகவி | ஊக்கம் | தேர்ச்சி |
| பொழிவார் | சரமாரி | ஹிந்தி | பிராயம் |
| பத்திரிகை | கல்லூரி | மிதித்து | தீரம் |
| முன்னேற்றம் | தாலூகா | அச்சிட்டு | புதல்வர் |

கேள்விகள்

1. பாரதியார் எந்தப் பத்திரிகைகளை நடத்தினார்?
2. பாரதியார் புதுச்சேரிக்கு ஏன் சென்றார்?
3. பாரதியார் எதனால் நோய்ப்பட்டு இறந்தார்?

பயிற்சி

I. எதிரான பொருளுள்ள சொற்களை எழுது:—

தெற்கு, கிழக்கு, நல்ல, பொழியும்.

II. பின்வரும் வாக்கியங்களில் உள்ள தவறுகளைத் திருத்தி எழுது:—

1. இவர் என்னை அடித்தான்.
2. இவரது கவித்திரமையைப் புலவர்கள் அரிந்தார்கள்.
3. நம் நாட்டு விடுதலைக்காகப் பாரதியார் தன் யிரையே கொடுத்தான்.

# 14. படப் பயிற்சி—I

## சிங்கத்தின் நன்றி

பின்வரும் படங்களைப் பார்த்து ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒரு வாக்கியம் எழுது. பிறகு அவற்றைச் சேர்த்துக் கதை சொல்லு.



# 15. கொசு

*பல்லவி*

பொல்லாத கொசுவே—இங்கே
நில்லாதே கொசுவே
எல்லோரும் உன்னையே—கண்டால்
கொல்வோமே கொசுவே. (பொ)

*சரணங்கள்*

1. குட்டை குளங்களிலும் கட்டுக் கடைத்
தண்ணீரிலும் முட்டையிட்டுக் குஞ்சாகி
மோசம் செய்ய வந்திடுவாய். (பொ)

2. மாடிமேல் ஏறி நாங்கள் மகிழ்வுடனே
உறங்கும்போது ஓடிவந்து ஊசிகுத்தி
உபத்திரவம் பண்ணுகிறாய். (பொ)

3. மா நிலத்தில் மக்கட்கெல்லாம் **மலேரியாக்**
காய்ச்சல் தந்து மானிடரின் ரத்தமதை
மண்டியிட்டுக் குடித்திடுவாய். (பொ)

4. குட்டை குளங்களையும் கட்டுக்கடைத்
தண்ணீரையும் திட்டமாக மூடி உன்னால்
தீங்கு வராமல் தடுப்போம். (பொ)

5. இல்லாமற் செய்திடவே எல்லோருமே
முயல்வோம் பொல்லாத மருந்தால் உன்னைப்
போக்கிடுவோம் ஓடு ஓடு. (பொ)

6. ஆய்ந்தறிந்த **கொயினாவினை** அடிக்கடி நாம்
அருந்தி **முறைக் காய்ச்சல்** தனைத் தடுப்போம்
கண்டு நீயும் ஓடிடுவாய். (பொ)

—*வி. கூ. நடராஜன்.*

கேள்விகள்

1. *கொசு எங்கு முட்டையிடுகிறது?*
2. *கொசு எந்த நோயைப் பரப்புகிறது?*
3. *கொசுவை ஒழிப்பது எப்படி?*
4. *முறைக் காய்ச்சலை எப்படி ஒழிக்கலாம்?*

# 16. வேடனை ஏமாற்றிய புருக்கள்

பறவை பிடிக்கும் வேடன் ஒருவன், ஒரு காட்டில் தன் வலையை விரித்து, தானியங்களை அதில் இறைத்து விட்டு ஒரு பக்கத்தில் ஒளிந்திருந்தான். அப்போது பக்கத்திலிருந்த மரத்தின்மேல் ஒரு புருக்கூட்டம் வந்திறங்கியது. புருக்கள் அங்கு இறைக்கப்பட்டிருந்த தானியங்களைத் தின்ன ஆவல் கொண்டன. அப்போது அக்கூட்டத்துக்குத் தலைமையான சித்திரக்கிரீவன் என்னும் புரு மற்றவைகளை நோக்கி, "மனிதர் இல்லாத இக்காட்டில் தானியம் எப்படி வந்தது? இதில் ஏதோ சூது இருக்கிறது. நன்றாய் யோசனை செய்து தான் நாம் கீழே இறங்க வேண்டும்" என்றது.

ஆனால் பசியோடிருந்த மற்றப் புருக்கள் சித்திரக் கிரீவனுடைய பேச்சைக் கேட்கவில்லை. உடனே அவை கீழே இறங்கித் தானியத்தைத் தின்ன ஆரம்பித்தன; அதனால் வலையில் அகப்பட்டுத் தத்தளித்தன. இதைக் கண்ட சித்திரக்கிரீவன், "ஐயோ! என் இனத்தார் யாவரும் வலையில் அகப்பட்டுக்கொண்டார்கள். நான் மாத்திரம் தப்பித்து என்ன பயன்?" என்று எண்ணி, அதுவும் வலையில் அகப்பட்டுக்கொண்டது. புருக்கள் எல்லாம் சித்திரக்கிரீவன் சொல்லியதைக் கேட்காததற்காக வருத்தப்பட்டன.

அப்போது சித்திரக்கிரீவன் மற்றப் புருக்களைப் பார்த்து, "நடந்ததை நினைத்து வருந்துவதால் என்ன பயன்? இப்போது நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து, வலையைத் தூக்கிக்கொண்டு பறந்துசெல்லவேண்டும். இல்லாவிடில் நாம் தப்ப வழியில்லை" என்று கூறியது. இதற்குள் புருக்களெல்லாம் வலையில் அகப்பட்டுக் கொண்டதைக் கண்ட வேடன், சந்தோஷத்தோடு

அவைகளைப் பிடிக்கச் சென்ருன். அப்போது எல்லாப் புருக்களும் ஒற்றுமையுடன் பறந்துபோயின.

இதைக்கண்ட வேடன் ஆச்சரியப்பட்டு அவைகளின் பின்னேயே ஓடினுன். புருக்களோ கண்ணுக்கு எட்டாத தூரத்தில் போய்விட்டன. வேடனும் வருத்



தத்துடன் வீடு திரும்பினுன். சித்திரக்கிரீவனும் புருக் கூட்டமும் மற்றொரு வனத்தில் போய் இறங்கின. அவ்வனத்தில் சித்திரக்கிரீவனுடைய சிநேகிதனுன இரணியகன் என்னும் எலியரசன் இருந்தது. புருக்கள் இறங்கிய ஓசை கேட்ட இரணியகன், தன் வளையிலிருந்து வெளியே வந்து, "சிநேகிதா! என்ன விசேஷம்?" என்று கேட்டது.

அதற்குச் சித்திரக்கிரீவன், "நண்பா! நாங்கள் மூடத்தனமாய் இவ்வலையில் அகப்பட்டுக் கொண்டோம். உன் கூர்மையான பற்களால் இந்த வலையைக்

கடித்து, அறுத்து எங்களை விடுவி" என்றது. இரணியகனும் அவ்வாறே செய்தது. எல்லாப் புருக்களும் விடுபட்டு மகிழ்ந்தன.

புருக்கள் முதலில் ஒன்றுபடாததால் வலையில் அகப்பட்டுக் கொண்டன. பிறகு அவைகள் ஒன்றுபட்டதால் வலையோடு பறந்து தப்பின. இதனால் ஒற்றுமை **எல்லோருக்கும் அவசியமானது** என்பது நன்கு விளங்கும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே!"-பாரதியார்

**சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை**

புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| *மூடத்தனமாய்* | *அகப்பட்டு* | *விடுவி* | *சூது* |
| *அனைவர்க்கும்* | *இனத்தார்* | *வனத்தில்* | *ஒற்றுமை* |
| *தானியங்கள்* | *வலிமை* | *வளை* | *ஆவல்* |

கேள்விகள்

1. *புருக்கள் எதனால் கஷ்டத்திற்குள்ளாயின?*
2. *மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம் என்பதை இக் கதையின் மூலம் ரூபி.*
3. *புருக்கள் வலையையும் தூக்கிக்கொண்டு வேடனுக்கு அகப்படாமல் பறந்தோட அவைகளிடம் காணப்பட்ட குணம் என்ன?*

பயிற்சி

I. *பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை :—*

*அகப்பட்டு; விரித்து; வனத்தில்; அனைவரும்; மூடத்தனமாய்; இனத்தார்; ஒற்றுமை; கூர்மை.*

II. *கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமை :—*

1. *புருக்களோ —— எட்டாத தூரத்தில் போய்விட்டன.*
2. *வேடனும் —— வீடு திரும்பினான்.*
3. *சித்திரக்கிரீவனும் புருக்கூட்டமும் —— வனத்தில் போய் இறங்கின.*



## 17. கடற்கரையும் துறைமுகமும்

(உரையாடல்)

**துரை :** சேகர்! சென்னைக்குப் போயிருந்தாயே, கடற்கரைக்குப் போயிருந்தாயோ?

**சேகர் :** ஓ! அது எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா?

**துரை :** கடல் பார்ப்பதற்கு எப்படி இருக்கிறது?

**சேகர் :** கடல் நீல நிறமாக இருக்கிறது. கண்ணுக்கு எட்டிய வரையில் ஒரே நீல நிறமான தண்ணீர் தான். சென்னைக் கடற்கரையில் விசாலமான மணற் பரப்பு இருக்கிறது.

**துரை :** கடல் நீரைக் குடிக்கலாமா?

**சேகர் :** குடிக்கவா? கடல் நீர் வெறும் உப்பு; சிறிது **கூட நன்ருயிராது.**

**துரை :** கடற் கரையில் நல்ல காற்று வீசுமா ?

**சேகர் :** மாலே வேளேகளில் கடலிலிருந்து காற்று வீசும். அதற்குக் கடற் காற்று என்று பெயர். கடற் காற்றுக்காகவே மாலேயில் பல ஜனங்கள் கடற்கரை மணலில் வந்து உட்காருகிருர்கள். கடற்கரையை 'பீச்' என்று சொல்கிருர்கள்.

**துரை :** கடற்கரையில் வேறு ஏதேனும் விசேஷம் உண்டா ?

**சேகர் :** அங்கே அலே மோதுகின்ற கரையோரமாகக் கட்டுமரங்கள் இருக்கின்றன. செம்படவர்கள் இவற்றில் ஏறிக்கொண்டு கடலில் சென்று மீன் பிடிக்கிருர்கள். காலேயில் கட்டுமரங்களில் செல்வோர் மீன் பிடித்துக்கொண்டு மாலேயில் திரும்புவார்கள்.

**துரை :** சென்னேயில் நீ கப்பலேப் போய்ப் பார்த்தாயா?

**சேகர் :** ஒரு கப்பலேப் பார்த்தேன்.

**துரை :** துறைமுகம் என்கிருர்களே, அது என்ன ?

**சேகர் :** கப்பல்கள் வந்து தங்குமிடத்திற்குத் துறைமுகம் என்று பெயர். கப்பலில் வரும் பிரயாணிகள் துறைமுகத்தில் இறங்குவார்கள். சாமான்கள் இறக்குமதி செய்யப்படும். கப்பல் மறுபடியும் புறப்படும்பொழுது வேறு பிரயாணிகளேயும் சாமான்களேயும் ஏற்றிக்கொண்டு செல்லும்.

**துரை :** தண்ணீரில் கப்பல் எப்படிச் செல்லுகிறது ?

**சேகர் :** கப்பலில் ஒரு எஞ்சின் இருக்கிறது. ரயில் வண்டி நீராவியால் ஓடுவதுபோல், கப்பலும் நீராவியால் செல்லுகிறது; இக்கப்பலுக்கு நீராவிக் கப்பல் என்று பெயர்.

**துரை :** வேறு விதமான கப்பல்களும் உண்டா ?

**சேகர் :** முன் காலத்தில் கப்பல்களில் பாய்மரம் என்ற ஒரு பெரிய தூண் அமைக்கப்பட்டிருந்தது. அதில் கெட்டியான துணி ஒன்று விரித்துக் கட்டப்பட்டிருக்கும். அதன்மேல் காற்று தாக்கிக் கப்பலைச் செலுத்தும். அதற்குப் பாய்மரக் கப்பல் என்று பெயர். இப்பொழுதெல்லாம் அம்மாதிரியான கப்பல்கள் அதிகமாயில்லை.

**துரை :** கடற்கரைக்கு அருகில் கப்பல் எப்படி வந்து நிற்கிறது ?

**சேகர் :** சென்னைத் துறைமுகத்தில் கடற்கரைக்கருகில் கடல் ஆழமாகத் தோண்டப்பட்டிருக்கிறது. அதனால் கரைக்கு அருகில் கப்பல்கள் வந்து நிற்கின்றன.

**துரை :** இரவில் கப்பலைச் செலுத்துபவர்களுக்குக் கரை தெரியுமா ?

**சேகர் :** துறைமுகங்களில் உயர்ந்த தீபஸ்தம்பங்கள் நிறுத்தியிருக்கிறார்கள். அவைகளில் பிரகாசமான விளக்குகள் இரவெல்லாம் எரியும். அவற்றின் உதவியால் மாலுமிகள் கடற்கரையைத் தெரிந்து கொள்வார்கள்.

**துரை :** நாமெல்லாம் ஒரு தடவையாவது கப்பலில் பிரயாணம் செய்து பார்க்க வேண்டாமா ?

**சேகர் :** அடுத்த பெரிய விடுமுறையில் எங்கள் வீட்டில் எல்லோரும் இலங்கைக்குப் போகிறோம். நீயும் வந்தால் அழைத்துச் செல்லுகிறேன்.

## புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| பீச் | விசாலமான | இறக்குமதி |
| பிரயாணி | பாய்மரம் | துறைமுகம் |
| மாலுமி | கட்டுமரம் | தீபஸ்தம்பம் |

## கேள்விகள்

1. கடல் பார்ப்பதற்கு எப்படியிருக்கும்?
2. கடல் நீரின் சுவை என்ன?
3. கடற் காற்று என்ருல் என்ன?
4. கட்டுமரம் யாருக்கு எதற்குப் பயன்படுகிறது?
5. நீராவிக் கப்பல் எதனுல் செல்லுகிறது? பாய்மரக் கப்பல் எதனுல் செல்கிறது?
6. தீபஸ்தம்பம் எதற்கு உதவுகிறது?

## பயிற்சி

**I.** பின் வரும் வாக்கியங்களிலிருந்து பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் எடுத்து எழுது:—

1. கடற்கரையில் நல்ல காற்று வீசும்.
2. மாலையில் பல ஜனங்கள் கடற்கரை மணலில் வந்து உட்காருகிருர்கள்.

**II.** மேல் வாக்கியங்களில் எடுத்தெழுதிய சொற்களுக்கு ஒருமை பன்மை கூறு.

**III.** முதல் பத்தியிலுள்ள ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொற்களை இரண்டாம் பத்தியிலிருந்து எடுத்து எழுது:-

| | |
|---|---|
| துறைமுகம் | காற்றினல் தள்ளப்படும். |
| தீபஸ்தம்பம் | மீன் பிடிக்க உதவும். |
| கட்டுமரம் | கப்பல்கள் தங்குமிடம். |
| பாய்மரக் கப்பல் | இரவெல்லாம் விளக்கெரியும். |

# 18. இயேசு கிறிஸ்துநாதர்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அரேபியா தேசம் செழிப்புற்றிருந்தது. அங்கே வாழ்ந்த மக்களில், கடவுள் பக்தியுள்ள **யூதர்** என்ற ஒரு இனத்தாரும் இருந்தார்கள். ஒரு யூத குடும்பத்தைச் சார்ந்த **மரியாள்** என்ற ஒரு எளிய பெண்ணின் குமாரராகக் கிறிஸ்து பிறந்தார்.

கிறிஸ்து பிறந்தவுடன் ஒரு அதிசய நட்சத்திரம் தோன்றியது. "இவர் யூதர்களுக்கு அரசர் ஆவார்," என்று சோதிடர் கூறினர். அதனால் **ஏரோது** என்ற யூத அரசர் இவரைக் கொல்ல முயன்றார். அவர் முயற்சி பலிக்கவில்லை. இவர் கல்வியிலும் ஞானத்திலும் நாளுக்குநாள் தேர்ச்சி அடைந்து வந்தார்.



கிறிஸ்து நாதர் மக்களைப் பார்த்து, "தன்னைப்போல் பிறரையும் நேசிக்கவேண்டும். தனக்கு மற்றவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ, அதையேதான் நாமும் அவர்களுக்குச் செய்ய வேண்டும். முழு இதயத்தோடும் முழு அன்போடும் முழு பலத்தோடும் கடவுளை வழிபட வேண்டும்" என்று உபதேசித்தார். அவர் மூன்றரை வருட

காலம் பல தெய்விக அருட் செயல்களைச் செய்தார். குருடர்களுக்குப் பார்வையளித்தார்; செவிடர்களுக்குக் காது கேட்கச் செய்தார் ; நொண்டிகளை நடக்கச் செய் தார் ; நோயாளிகளைக் குணமாக்கினர் ; மரித்தோரை உயிரோடெழுப்பினர்.

ஏரோது இவர் புகழைக்கண்டு பொருமை கொண் டார். 'அவர் அரசராஞலும் ஆகலாம்' என்று சந்தே கித்தார். பொய்ச் சாட்சிகள் தயார் செய்யப்பட்டன. அரச நிந்தனை, தெய்வ நிந்தனை ஆகிய இரண்டு குற் றங்கள் அவர் பேரில் சுமத்தப்பட்டன. இக்குற்றங் களுக்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட் டது. அத்தேசத்தின் அக்கால வழக்கப்படி **சிலுவை** மரத்தில் ஆணிகளால் அடிக்கப்பட்டார். அப்போது அவர் "கடவுளே! இவர்களை மன்னியும். இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிருர்கள்," என்று கடவுளை வேண்டிக்கொண்டார். உடனே உயிர் துறந்தார். அவரை ஒரு கல்லறையில் அடக்கம் செய் தார்கள்.

மூன்றும் நாள் உயிரோடு எழுந்தார். தம்மைப் பின்பற்றிய சீடர்களுக்கு முன் தோன்றினர். தம் முடைய உபதேசத்தை உலகத்தில் பரப்பும்படி ஆணை யிட்டார். நாற்பது நாள் அவர்களோடிருந்து, சீடர்கள் எல்லோரும் பார்த்திருக்கும்போதே பரலோகம் சென் ருர்.

இவ்வாறு மனிதர்களுடைய அறியாமைக்காகத் தம்மையே தியாகம் செய்த **இயேசு கிறிஸ்து நாதர்** உலகப் புகழ் அடைந்தார். இதனுலேயே அவருடைய மதம் இன்று உலகமெங்கும் வியாபித்திருக்கிறது.

### புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| சந்தேகித்தார் | சார்ந்த | இதயம் | நேசிக்க |
| செவிடர்கள் | மன்னியும் | சாட்சிகள் | சோதிடர் |
| மரித்தோர் | பரலோகம் | தியாகம் | பலிக்க |

### கேள்விகள்

1. கிறிஸ்துவின் தாயாரின் பெயர் என்ன?
2. ஏரோது என்ற மன்னன் கிறிஸ்துவை ஏன் கொல்ல முயற்சித்தான்?
3. கிறிஸ்து மக்களுக்கு என்ன உபதேசித்தார்?
4. கிறிஸ்துவின்மீது என்ன குற்றங்கள் சாட்டப்பட்டன?

### பயிற்சி

I. பின் வரும் சொற்களைச் சிறு வாக்கியங்களில் அமைத்துச் சொல்லு:-

ஆணை, செழிப்பு, போதித்தார்.

II. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்துப் பூர்த்தி செய்:—

1. ஏரோது, கிறிஸ்துவின் புகழைக்கண்டு———கொண்டார்.
2. தன்னைப்போல்———நேசிக்க வேண்டும்.

III. பின்வரும் வாக்கியங்களில் வினைச் சொற்கள் தவறுயுள்ளன. அவற்றைத் திருத்தி எழுது:-

1. நானும் அவனும் புசித்தேன்.
2. காட்டில் மரங்கள் செழிப்பாக வளர்கின்றன.
3. ஆடுமாடுகள் மேய்வதற்குச் சென்றது.

Printed at the ...

# 19. பருத்திச் செடி

நமது உடைகளில், சில பஞ்சினுலும் சில பட்டினுலும் சில கம்பளியினுலும் செய்யப்பட்டவை. இவைகளில் பஞ்சினுல் செய்யப்பட்டவைதான் அதிகம். பருத்திச் செடியிலிருந்து பஞ்சு கிடைக்கிறது.

பருத்தி உஷ்ணப் பிரதேசங்களில்தான் அதிகமாய் உண்டாகும். பருத்தியில் அநேக வகைகள் உண்டு. பருத்திச் செடி கரிசல் நிலத்தில்தான் செழித்துவளரும்; நல்ல பலனையும் கொடுக்கும். கரிசல் நிலத்தைக் கோடை காலத்தில் நன்ருய் உழுது புழுதியாக்க வேண்டும். மழை காலத்தில் ஒன்று இரண்டு மழை பெய்ததும் நல்ல பருத்தி விதைகளை எடுத்து, சாணிப் பாலூட்டி விதைக்க வேண்டும். விதைகள் மண்ணுள் மறையும்படி மறுபடியும் உழவேண்டும். சில நாட்களில் விதை முளைக்கும். பத்து அல்லது பதினைந்து இலைகள் விட்டதும் களையெடுக்க வேண்டும். பின்பு ஒரு அடி உயரம் வளர்ந்ததும் களைக்கொட்டினுல் மேல்மண் புரளும்படியும் களைகள் அறும்படியும் கொத்தி விடவேண்டும். மேல் மழை ஒன்று பெய்தால் செடி நன்ருய் வளரும்.



மூன்று மாதங்களில் பூக்கள் தோன்றும். இவை மஞ்சள் நிறமாய்ப் பெரியதாயிருக்கும். சில தினங்களில் பூ இதழ்கள் உதிர்ந்துவிடும். உதிர்ந்த இடத்தில் பிஞ்சுகள் தோன்றும். ஒரு மாதத்திற்குள் இவை காய்களாகி முற்றி, சூரிய வெப்பத்தினுல் வெடிக்கும்

வெடித்த காய்கள் மூன்று பிரிவாகப் பிரிந்து நிற்கும். அந்தப் பிரிவுக்குள் பருத்தி நிறைந்திருக்கும். இப்படியாக முன்னும் பின்னுமாக மூன்று மாதம் வரை பருத்தி வெடிக்கும். விவசாயிகள் ஆணும் பெண்ணுமாகப் போய் ஒரு நாள் விட்டு ஒரு நாள் பருத்தியைச் சேகரிப்பார்கள். ஒவ்வொரு காயில் வெடிக்கும் பருத்தி '**சுளை**' என்று சொல்லப்படும். இந்தச்சுளையைப் பிரித்துப் பார்த்தால் அதனுள்ளே இரண்டு மூன்று விதைகளிருக்கும்.



இப்படிச் சேகரித்த பருத்தியை அதற்கென்று ஏற்பட்ட மணைகளில் வைத்துச் சுற்றினல் பருத்தியிலுள்ள பஞ்சு வேறு, விதை வேருகப் பிரிந்துவிடும். பஞ்சை, ராட்டைகளிலும் எந்திரங்களிலும் வைத்து நூலாக நூற்று நெசவு செய்து துணியாகச் செய்கிருர்கள். விதையை மாட்டிற்கு நல்ல உணவாகக் கொடுக்கலாம். விதை விதைப்பதற்காகவும் சேகரித்துவைக்கலாம். பருத்தி விதையிலிருந்து ஒருவித எண்ணெய் எடுப்பதும் உண்டு.



பருத்திச் செடி ஒரு வருடத்திற்கு மேல் நல்ல பலனைக் கொடுக்காது. ஆகையால் விவசாயிகள் காற்றுக் காலம் வந்ததும் பருத்திச் செடியைப் பிடுங்கி விடுவார்கள். பிடுங்கின செடிகள், மறைவு தட்டிகள் பின்னவும், காய்ந்தபின் அடுப்பெரிக்கவும், சில இடங்களில் உரமாகவும் பயன்படுத்துகிருர்கள்.

பருத்தி ஆடை ஏழைகளுக்கு எளிதில் கிடைக்கக் கூடியது. நம் நாட்டு சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தது. நம் தேசத்தில் பருத்தி ஏராளமாய் உற்பத்தியாக வேண்டிய வசதிகளிருக்கின்றன. ஆகையால் நாம் நமக்குப் பலவித ஆடைகள் அளித்து உதவும் பருத்தியை நன்கு வளர்த்து, அதன் மூலம் நம் நாட்டுக் கைத் தொழில்களையும் ஆலைத் தொழில்களையும் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும்.

புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| வசதி | கூரை | மழை | சுளை |
| ராட்டை | எந்திரம் | புழுதி | கம்பளி |
| இதழ்கள் | பிரிவாக | கரிசல் | வேயவும் |
| வெடிக்கும் | உதிர்ந்து | பிஞ்சுகள் | தட்டிகள் |
| ஏராளமாய் | சேகரிப்பார் | சாணிப்பால் | பருத்தி |

கேள்விகள்

1. பருத்தி எந்தப் பிரதேசத்தில் உண்டாகும்?
2. பருத்தி பயிரிடுவதற்கு நிலத்தை எப்படித் தயார் செய்ய வேண்டும்?
3. பருத்திச் செடி பயிரிடுவதைப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமை :—

1. பருத்தி———பிரதேசங்களில்தான் அதிகமாய் உண்டாகும். (உஷ்ண, குளிர்)

2. பருத்தி ——— நிலத்தில் தான் செழித்து வளரும். (மணல், கரிசல்)

3. ஒரு பருத்திக்காயில் உள்ள பருத்திக்கு———என்று பெயர். (பொதி, சுளை)

II. பின் வரும் சொற்களைத் தகுந்தபடி மாற்றி வாக்கியங்களாக அமை :—

1. கிடைக்கக் கூடியது ஆடை பருத்தி எளிதில் ஏழைகளுக்கு.

2. விடுவார்கள் வந்ததும் பருத்தியை காற்றுக் காலம் பிடுங்கி.



## 20. காந்தியடிகளும் ஹரிஜனங்களும்

மகாத்மா காந்தியை நம் நாட்டின் பிதா என்று சொல்கிறோம். ஏனெனில் அவரே நாம் சுதந்திரம் பெறுவதற்கு வழிகாட்டியாக இருந்தார். அவரிடம் இரண்டு முக்கியமான குணங்களிருந்தன. பிறரைத் துன்புறுத்தாமை, உண்மை ஆகிய இரண்டுமே அந்தக் குணங்களாகும்.

இந்தியரிடையே சிலர் தீண்டாதார் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். இந்த நிலைமை ஒழிய வேண்டுமென்று காந்தியடிகள் எடுத்துக் காட்டினர். தம் வாழ்க்கையில் அவர் யாரையும் தீண்டாதார் என்று ஒதுக்கிவைத்ததில்லை. அவர்களை ஹரிஜனங்கள் என்று போற்றினர்.

ஒரு கிராமத்தில் காந்தியடிகள் ஒரு கூட்டத்தில் பேச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்

திற்குப் பல ஹரிஜனங்களும் வந்திருந்தார்கள். மற்ற ஜாதியார் அவர்களைத் தூரத்தில் உட்காரச் செய்தனர். காந்தியடிகள் கூட்டத்திற்கு வந்து பேசத் தொடங்கு முன், ஒரு தடவை கூட்டத்தைப் பார்த்தார். தூரத்தில் உட்கார்ந்திருந்த ஹரிஜனங்களைக் கண்டார்.

உடனே காந்தியடிகள் அக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த ஒருவரை அழைத்து, அந்த மக்கள் ஒதுங்கி உட்கார்ந்திருப்பதற்குக் காரணம் கேட்டார். கூட்டத் திற்கு ஏற்பாடு செய்தவர், ''மகாத்மாஜி! அவர்கள் சேரி மக்கள்'' என்று பதிலளித்தார்.

காந்தியடிகள், ''அந்த ஹரிஜனங்கள், உங்க ளுடன் உட்கார முடியாதென்றால், நான் அவர்களிடம் சென்று அங்கேயிருந்து பேசப் போகிறேன்'' என்று சொன்னார். உடனே மேடையிலிருந்து இறங்கி, சேரி மக்கள் இருந்த இடத்திற்குச் சென்றார். கூட்டத்தி லிருந்த பலரும் காந்தியடிகளைப் பின்பற்றி ஹரிஜனங்க ளுடன் சேர்ந்துகொண்டார்கள். ''மகாத்மாஜிக்கு ஜே!'' என்று எல்லோரும் ஆரவாரம் செய்தார்கள்.

சொல்வதொன்று செய்வது வேறென்று என்பதே காந்தியடிகளிடம் இல்லை. பிறருக்கு உப தேசம் செய்ததைக் காந்தியடிகள் எப்பொழுதும் தாமே கடைப்பிடித்தார். தீண்டாமையை ஒழிக்க வேண்டு மென்று அவர் கூறியதை நாளடைவில் எல்லா இந்தி யர்களும் ஒப்புக் கொண்டார்கள். இப்பொழுது நம் நாட்டில் தீண்டாமை அறவே ஒழிக்கப்பட்டு விட்டது.

புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| சேரி | ஆரவாரம் | கடைப்பிடி | ஹரிஜனங்கள் |
| அறவே | வழிகாட்டி | நாளடைவில் | துன்புறுத்தாமை |

## கேள்விகள்

1. காந்தியடிகளை நாம் ஏன் 'நாட்டின் பிதா' என்று சொல்கிறோம்?
2. கூட்டத்திற்கு வந்த ஹரிஜனங்கள் ஏன் ஒதுங்கி உட்கார்ந்தனர்?
3. கூட்டத்திற்கு வந்தவுடன் காந்திஜி என்ன செய்தார்?
4. காந்திஜிக்கு ஹரிஜனங்களிடமிருந்த அன்பு எப்படி வெளிப்பட்டது?
5. காந்திஜியிடம் காணப்பட்ட இரு முக்கிய குணங்கள் என்ன?

## பயிற்சி

I. பின்வரும் சொற்களில் எது பெயர்ச் சொல், எது வினைச் சொல் என்று கூறு; ஒவ்வொன்று என்ன எண் என்பதையும் சொல்லு:-

கூட்டம், மக்கள், இருந்தன, மரங்கள், அது, அவை, நின்றது.

II. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்து எழுது:-

1. காந்திஜியிடம் இருந்த இரு குணங்கள் ——.

2. பிறருக்கு உபதேசம் செய்ததைக் காந்தியடிகள் தாமும் ——.



## 21. மலர்கள்

மண்ணிலிருந்து பொருள் வரினும்—அதை
மாற்றி மணம் பெறச் செய்திடுவோம்
கண்ணுக் கினிய நிறங்களெல்லாம்—விண்ணிற்
காணுங் கதிரிடம் பெற்றிடுவோம்.

வண்டின் வரவெதிர் பார்த்து நிற்போம்—நல்ல
வாசனை வீதியில் வீசி நிற்போம்
உண்டு களிக்க மதுவளிப்போம் — சற்றே
உட்காரப் பீடமும் இட்டு வைப்போம்.

மங்கைய ரோடு குமரரையும்—மனம்
வாய்த்த மணஞ்செய்து வாழ வைப்போம்
தங்கமும் பொன்னும் மணிகளுமே—எம்மைத்
தாழ்ந்து வணங்க மேல் தங்கிடுவோம்.

ஈசன் அடியில் பணிந்திருப்போம்—அவர்
ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம்
பூசனை செய்யும் அடியவரின்—உள்ளம்
பொங்கு களிப்பெலாம் காட்டி நிற்போம்.

மன்னருங் கண்டெதிர் வந்திடுவர்—கட்டி
மார்போ டணைத்து மகிழ்ந்திடுவர்
இந்நிலத் தின்பம் பெருகிடவே—நாங்கள்
என்றும் உயிர்வாழ்ந் திருப்போமம்மா.

—தேசிக விநாயகம் பிள்ளை.

கேள்விகள்

1. வண்டுகளுக்கு மலர்கள் என்ன தருகின்றன ?
2. திருமணத்திலும், ஈசனைப் பூசனை செய்யும்பொழுதும் மலர்கள் எப்படிப் பயன்படுகின்றன ?

# 22. அதிவீரராம பாண்டியர்

சுமார் நானூறு வருடங்களுக்கு முன் திருநெல்வேலியிலுள்ள கொற்கை நகரில் அதிவீரராமர் என்ற பாண்டிய அரசர் ஆண்டுவந்தார். அவருக்கு வரதுங்க பாண்டியர் என்ற தமையனார் இருந்தார். அவர் திருக் கருவை என்னும் நகரில் செங்கோல் செலுத்திவந்தார். இவர்களிருவரும் மதுரையில் ஆண்ட பாண்டியர் களுக்கு அடங்கியவர்களே.

அதிவீரரும் வரதுங்கரும் தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளிலும் வல்லவர்கள். கவி பாடு வதில் மிகவும் சிறந்தவர்கள். வரதுங்க பாண்டியர் சிவபெருமானிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர். அவர் பாடிய பாடல்களெல்லாம் சிவபெருமானைப் போற்றுவனவே. வரதுங்கரின் மனைவியாரும் தமிழில் வல்லவரே. ஆனால் அதிவீரராமரோ உலக விஷயங் களில் ஈடுபட்டு உலக இன்பத்தைப் பற்றியே பாடி வந்தார்.

அதன்படியே அதிவீரராமர் தமிழில் நைடதம் என்னும் நூலைப் பாடத் தொடங்கினார். நைடதம் நளமகாராசனுடைய கதையைக் கூறும் நூல். அதில் அதிவீரராமர் உலக இன்பங்களைப் பற்றி விமரிசையாகப் பாடினார். இவ்வாறு பாதி நூல் முடிந்ததும் பாடல்களைத் தமையனாரிடம் காண் பித்தார். அவைகளைப் பார்த்து வரதுங்கர், "தம்பி! எம்பெருமானைத் துதியாது மனிதனைப் புகழ்ந்து, இவ்வுலக இன்பத்தைப்பற்றியே பாடியுள்ளாயே" என்று கூறி வருந்தினார்.

இதைக் கேட்டதும் அதிவீரராமரது உற்சாகம் குறைந்துவிட்டது. இருந்தபோதிலும் எடுத்த காரி யத்தை முடிக்கவேண்டும் என்று எண்ணி, ஒருவாறு

அந்நூலைப் பாடி முடித்தார். முடிந்ததும் தமது சமஸ்தானப் புலவர்களிடம் காட்டினுர். அவர்கள் அவருடைய நூல் "**கரும்பின் இனிப்பைப்போல் சிறந்து விளங்குகின்றது**" என்றனர். பிறகு அதிவீரராமர் தமது நைடதத்தை, தமையனுரது மனைவியிடம் காட்டினுர். அந்த அம்மையார் அதைப் பார்த்து, "வேட்டை நாய் காட்டிற்குச் செல்லும்போது ஊக்கத்துடன் சென்று, திரும்பிவரும்போது சோர்ந்து வருவது போல் இருக்கிறது" என்று கூறினுர்.

அதிவீரராமர் இதைக் கேட்டுப் பெருங் கோபங் கொண்டார். உடனே தம் ஊர் சென்று படைகளைத் திரட்டி, தமையனுரோடு சண்டை செய்யப் புறப்பட்டார். தம்பி படையெடுத்து வந்ததைக் கேட்ட வரதுங்கர், ஒரு ஓலையில் "ஆருயிர்த் தம்பி! **கர்ணன், இராவணன், அர்ச்சுனன்** இவர்களைப்போல் நீ இராதே. ஆனுல் **ஸ்ரீராமனையும் பரதனையும்** போல் இரு," என்னும் பொருளுள்ள,

*" செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்*
*பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே—விஞ்ச*
*விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட*
*பரதனையும் ராமனையும் பார்,"*

என்ற பாட்டை எழுதியனுப்பினுர்.

இந்தப் பாட்டைப் பார்த்த அதிவீரராமர் மனம் வருந்தித் தமது தப்பிதத்தை உணர்ந்தார். உடனே படைகளைத் திருப்பி யனுப்பிவிட்டுத் தமையனுரிடம் சென்று அவரை வணங்கினுர். அப்போது வரதுங்கர், "தம்பி! உனது சமஸ்தானப் புலவர்கள் கூறியதையே உன் அண்ணியும் கூறினுள். கரும்பை அடியிலிருந்து தின்றுகொண்டே போனுல், முதலில் இனிப்பும், கொழுத்தாடைப் பக்கத்தில் உப்பும் தோன்றும். அது

போலவே உன் அண்ணியும் உனது நைடதத்தை வேட்டை நாய்க்கு ஒப்பிட்டாள். ஆனால் பாடல்கள் சிறந்தவைகளே. ஆகையால் நீ மனம் வருந்த வேண்டாம்,'' என்றார்.

உடனே அதிவீரராமர் மகிழ்ந்து, நறுந்தொகை என்னும் வெற்றி வேற்கை பாடினார். அதிவீரராமரைப் பிள்ளைப் பாண்டியன் என்றும் தமிழ் வளர்த்த தென்னவன் என்றும் சொல்வதுண்டு.

புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அண்ணி | விமரிசை | உற்சாகம் | ஈடுபட்டு |
| துதியாது | பெருமான் | தமையனார் | இன்பம் |
| விரதம் | செங்கோல் | கொழுத்தாடை | ஒப்பிடு |

கேள்விகள்

1. அதிவீரராம பாண்டியர் என்ன நூல்களை இயற்றினார்?
2. சமஸ்தானப் புலவர்கள், நைடதம் எப்படி இருந்ததாகச் சொன்னார்கள்?
3. அதிவீர ராமரின் அண்ணி நைடதத்தை எதற்கு ஒப்பிட்டாள்?
4. அதிவீரராமர் தம் தமையனார்மீது படையெடுத்த பொழுது, அவர் செய்த உபதேசம் யாது?

பயிற்சி

I. பின்வரும் சொற்களை வாக்கியங்களில் அமை :—
வருந்தினான், திரட்டி, திரும்பி, சிறந்தவை.

II. முதல் பத்தியில் உள்ள பெயருக்குப் பொருத்தமான பெயரை இரண்டாம் பத்தியிலிருந்து எடுத்துச் சேர் :-

| | |
|---|---|
| இராவணன் | கர்ணன் |
| ராமன் | வரதுங்க பாண்டியன் |
| அருச்சுனன் | விபீடணன் |
| அதிவீரராம பாண்டியன் | பரதன் |

III. தகுந்த இடங்களில் முற்றுப் புள்ளி வைத்துப் பிரி:—

அதிவீரராமர் இதைக் கேட்டுக் கோபங்கொண்டார் உடனே தம் படைகளைத் திரட்டினார் தமையனுடன் போர் செய்யச் சென்றார்.

# 23. தேசிங்கு ராஜன்

டில்லியில் அரசாண்ட முகம்மதிய சக்கரவர்த்தி களுள் ஷா ஆலம் ஒருவர். அவரிடம் எவர்க்கும் அடங்காக் குதிரை ஒன்று இருந்தது. அது மிகவும் கொடிய குணமுடையது. பின்னுல் போனுல் உதைக் கும்; முன்னுல் வந்தால் கடிக்கும். அதை அடக்கவோ அதில் சவாரி செய்யவோ ஒருவராலும் முடியவில்லை.

சக்கரவர்த்தியும், அந்தக் குதிரையை அடக்கி அதில் சவாரி செய்கிறவனுக்குப் பெரிய பரிசு அளிப்ப தாகத் தம் தேசம் முழுவதும் விளம்பரம் செய்தார். பல சிற்றரசர்கள் அக்குதிரையை வசப்படுத்த முயன் றனர். ஒன்றும் பலிக்கவில்லை. குதிரையை அடக்க முயன்று பின்னடைந்தவர்கள் எல்லோரும் சிறையில் இடப்பட்டனர். அவர்களில் நம் தென்னுட்டில் உள்ள செஞ்சிக் கோட்டைச் சிற்றரசராகிய தரணிசிங்கும் ஒருவர்.

தரணிசிங் அரசர் சிறையிலிடப்பட்டபொழுது, அவரது மனைவி கருவுற்றிருந்தாள். காலாகாலத்தில் அவளுக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. அவனுக் குத் தேசிங்கு என்று பெயரிட்டனர். அவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந் தான். அவனுக்குப் பதினெட்டு வயது நிறைந்தது. அவன் தனது தந்தையாரது சிறைவாசத்தைப் பற்றி அறிந்தான். டில்லிச் சக்கரவர்த்தியின் அடங்காக் குதி ரையை அடக்கி, தன் தகப்பனுரை மீட்க எண்ணங் கொண்டான்.

தேசிங்கு தன் பள்ளித் தோழன் முகம்மதுகானைக் கூட்டிக்கொண்டு டில்லி சேர்ந்தான்; அடங்காத குதிரையை அடக்குவதற்கு வந்திருப்பதாகச் சக்கர

வர்த்தியிடம் தெரிவித்தான். சக்கரவர்த்தியும் சம்ம தித்தார். குதிரை வெளியே கொண்டுவந்து நிறுத்தப் பட்டது. தேசிங்கு பாய்ந்து எழுந்து அதன் பக்கம் போனான். குதிரையைத் தட்டிக்கொடுத்து அதன்மேல் குதித்து ஏறினான். குதிரையும் தாவிப் பாய்ந்தது. தேசிங்கோ அதை மனம்போல போகவிட்டான்.



செஞ்சிக்கோட்டை

குதிரையும் வெகுதூரம் ஓடிக் களைத்தது. தேசிங்கும் வெற்றி பெற்றான். எல்லோரும் அவனைப் புகழ்ந் தனர். ஷா ஆலம் அந்தக் குதிரையை அவனுக்கே கொடுத்தார். தரணி சிங்கும் விடுதலையடைந்தார். தரணிசிங் வருடா வருடம் சக்கரவர்த்திக்குக் கட்ட வேண்டிய கப்பத்தை இனிக் கட்டவேண்டியதில்லை என்று உத்தரவு பிறந்தது. டில்லிச் சேனாதிபதி தன் மகளைத் தேசிங்குக்குக் கலியாணம் செய்து கொடுத் தான். செஞ்சிக் கோட்டைக்கு எல்லோரும் திரும்பினர்.

சிறிது காலத்தில் தரணி சிங் மரணமடைந்தார். தேசிங்கு பட்டத்துக்கு வந்தான். செஞ்சி, செல்வத்திலும் நாகரிகத்திலும் முதன்மைபெற்றது. முகம்மதுகான் சேனுதிபதி ஆனுன். அவனுக்குக் கலியாணமும் ஏற்பாடாயிற்று. டில்லி சக்கரவர்த்திக்காக ஆற்காட்டு நவாபு கப்பம் வசூல் செய்தான். அவன் தேசிங்கிடமும் கப்பம் கேட்டனுப்பினுன். இதுகேட்ட தேசிங்கு கடுங்கோபங்கொண்டான். "என்னைச் சண்டையில் வென்று கப்பம் வாங்கிக் கொள்ளட்டும்," என்று சொல்லி அனுப்பினுன்.

முகம்மதுகானுக்குக் கலியாணம் நடந்துகொண்டிருந்த சமயம் செஞ்சியில் சண்டையும் ஆரம்பித்தது. இது அறிந்த முகம்மதுகான் கலியாணத்தை நிறுத்திவிட்டுச் சண்டைக்குச் சென்றுன். நவாபின் சேனையைச் சின்னுபின்னப்படுத்தினுன். எதிர்த்து நிற்பார் ஒருவரும் இல்லை. முகம்மதுகான் கோட்டைக்குத் திரும்பினுன். வழியில் பிணக் குவியலின் மறைவிலிருந்து ஒருவன் அவனை ஈட்டியால் குத்திக்கொன்றுன். இதையறிந்த ராஜா தேசிங்கு சினங்கொண்டான். சீறி எழுந்தான். யுத்தகளத்திற்குச் சென்றுன். எஞ்சி நின்ற நவாபின் சேனையையும் சின்னுபின்னம் செய்தான். முகம்மதுகான் இல்லாமல் உயிர் வாழ அவன் விரும்பவில்லை. தன் வாளை உயர எறிந்தான். தன் மார்பை அதற்கு நேராகக் காண்பித்தான். வாள் அவன் மார்பில் பாய்ந்து, அவன் உயிரை வாங்கியது. தேசிங்கின் மனைவி தீ வளர்த்து அதில் விழுந்து இறந்தாள். அவள் கற்பின் மேன்மைக்கும், தேசிங்கின் வீரத்திற்கும், உயர்ந்த சிநேகத் தன்மைக்கும் அவர்களை இன்றும் உலகம் போற்றுகிறது.

## புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| கற்பு | எஞ்சி | பிணம் | சேனாதிபதி |
| மேனி | வசூல் | கப்பம் | விளம்பரம் |
| நவாபு | ஈட்டி | சவாரி | வண்ணம் |

## கேள்விகள்

1. தரணிசிங் என்ன காரணத்தினால் சிறையிலிடப் பட்டார்?

2. தேசிங்கு ராஜன் குதிரையை அடக்கினதால் அடைந்த லாபம் என்ன?

3. நவாபுக்கும் தேசிங்கு ராஜனுக்கும் நடந்த சண்டைக்குக் காரணம் யாது?

4. முகம்மதுகான் யார்?

5. தேசிங்கு ராஜன் எவ்வாறு மரணம் அடைந்தான்?

## பயிற்சி

I. பின்வரும் வார்த்தைகளைத் தகுந்த வாக்கியங்களில் அமை :-

விடுதலை, கப்பம், கொடிய, குதித்து, மீட்க, சின்னாபின்னம், வெற்றி, சவாரி.

II. இப்பாடத்தில் வரும் இடங்களின் பெயர், பிராணிகளின் பெயர் இவைகளைத் தனித்தனியாக எடுத்து எழுது.

# 24. இரு கடிதங்கள்

I

*மேல மாசி வீதி,*
*மதுரை.*
*20, செப்டம்பர், 1954.*

அன்புள்ள சேகர்,

சென்ற வாரத்தில் நீ எங்கள் ஊருக்கு வரப்போவதாகச் சொல்லி வராமலிருந்து விட்டாய். என்னை இப்படி நீ ஏமாற்றலாமா? என் தாயாரும் தகப்பனாரும் நீ வராததற்கு வருந்தினார்கள்.

போனது போகட்டும். இந்த மாதம் 25-ம் தேதி (இன்னும் நான்கு நாட்களே இருக்கின்றன!) எனக்குப் பிறந்த நாளாம். என் பெற்றோர் அந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடப் போகிறார்களாம். இந்த மாதிரியான கொண்டாட்டங்களில் எனக்கு விருப்பமில்லை. ஆனால் அன்று நல்ல சாப்பாடு கிடைக்கும். நீ தவறாமல் அந்தக் கொண்டாட்டத்திற்கு வரவேண்டும். அன்று ஞாயிற்றுக் கிழமையாயிருப்பதால், உனக்கு லீவுதான். 'வேலை இருந்தது, வரமுடியவில்லை' என்று சொல்லிக்கொள்ள முடியாது.

உன் அன்பன்,
**கண்ணன்.**

## II

மலைக்கோட்டைத் தெரு,
திருச்சி.
21, செப்டம்பர், 1954.

அன்புள்ள கண்ணு !

உன் பிறந்த நாளை நீ கொண்டாடப் போவதை அறிந்து மகிழ்ச்சி யடைகிறேன். ஆனால் அதற்கு நான் வர இயலாததைக் குறித்து வருந்துகிறேன். எங்கள் பள்ளியில் இப்பொழுது பரிட்சை நடந்துகொண்டிருக் கிறது. வரவிருக்கும் உன் பிறந்த நாளுக்கு மறு நாள் எனக்குத் தமிழ்ப் பாடப் பரிட்சை. நான் மதுரைக்கு வந்துவிட்டுத் திரும்பிவந்து பரிட்சை எழுதலாம் ; ஆனால் பாடங்களைப் படிக்க நேரமிராது.

இன்று உனக்குப் பிறந்த நாள் பரிசாக ஒரு புத்தகம் அனுப்பியிருக்கிறேன். அதைப் பெற்றுக்கொண்டு, நான் வரமுடியாததற்கு என்னை மன்னித்துவிடு. பரிட்சை முடிந்ததும் தொடங்கும் விடுமுறை நாட்களை நான் உன்னுடன் கழிக்கத் திட்டம் போட்டிருக் கிறேன்.

உன் பிரிய நண்பன்,
சேகர்.

பயிற்சி

1. உன் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு கொண்டாட்டத்திற்காக உன் நண்பனுக்கு ஒரு அழைப்புக் கடிதம் எழுது.

2. உன் ஊர்த் திருவிழா ஒன்றை விவரித்து உன் மாமனுக்கு ஒரு கடிதம் எழுது.

# 25. படப் பயிற்சி—II

## நாயின் நல்லறிவு

பின்வரும் படங்களை வரிசையாகப் பார்த்து ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒரு வாக்கியம் எழுது. பிறகு அவற்றைச் சேர்த்துக் கதையாகச் சொல்லு.



## 26. அடக்கம் பெருமை தரும்

ஈசுவரசந்திரர் வங்காளத்தில் பிறந்தார். இளமையிலேயே அவர் மிகவும் கெட்டிக்காரராக இருந்தார். அவர் கல்கத்தாவிலுள்ள ஒரு கல்லூரியில் சம்ஸ்கிருதம் கற்றுப் பெரும் புலவரானூர். அவருடைய தகுதியை அறிந்து அரசாங்கத்தார் அவருக்கு வித்தியாசாகரர் (கல்விக் கடல்) என்னும் பட்டம் அளித்தார்கள். இதிலிருந்து அவர் ஈசுவரசந்திர வித்தியாசாகரர் என்று அழைக்கப்பட்டார்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அவருக்குச் சர்க்கார் உத்தியோகம் கிடைத்தது. நாளடைவில் அவர் சம்ஸ்கிருதக் கல்லூரியில் தலைமை ஆசிரியர் ஆனூர். அதன் பிறகு அவர் வங்காளத்திலிருந்த சம்ஸ்கிருத பாடசாலைகளையும், கல்லூரிகளையும் மேற்பார்க்கும் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர் வங்காளி மொழியிலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்.

ஈசுவரசந்திரர் அடக்கமான சுபாவம் பொருந்தியவர். எப்பொழுதும் ஏழை எளியாருக்குத் தம்மால் இயன்ற அளவு உதவி செய்து வந்தார். அவர் நூற்றுக் கணக்கான ஏழை மாணவர்களுக்கு உதவி செய்தார். அவர் இவ்வளவு பெரிய மனிதராக இருந்தும், எப்பொழுதும் சாதாரணமான உடையே அணிந்துவந்தார். ரயில் பிரயாணத்தின் பொழுது அவர் மூன்ரும் வகுப்பு வண்டியிலேயே பிரயாணம் செய்து வந்தார்.

ஒரு தடவை வித்தியாசாகரர், கல்கத்தாவிலிருந்து பர்த்வானுக்குச் சென்றுகொண்டிருந்தார். அதே வண்டியில் ஒரு நவநாகரீக இளைஞன் ஐரோப்பிய உடை அணிந்து உட்கார்ந்திருந்தான். அவனும் பர்த்வானுக்குச் சென்று கொண்டிருந்தான். ரயில் வண்டி

பர்த்வான் ஸ்டேஷனில் வந்து நின்றது. இளைஞன் தன்னுடைய சிறு கைப்பெட்டியைத் தூக்கி வருவதற் காகக் கூலியாளைக் கூவியழைத்தான். அச்சமயம் ஸ்டேஷனில் கூலியாள் யாரும் இல்லை. இளைஞன் மிக்க கலவரமடைந்தான். இதைக் கண்ட வித்தியா சாகரர் அவனிடம் சென்று, ''இங்கே கூலியாள் யாரும் இல்லை. உங்களுக்குச் சம்மதமானால், நானே பெட்டி




யைத் தூக்கி வருவேன்,'' என்றார். இளைஞன் கர்வத் துடன் அதற்குச் சம்மதித்தான். வித்தியாசாகரர் பெட்டி யைத் தூக்கிக் கொண்டு இளைஞன் முன்னால் சென்றார். வீட்டை அடைந்தபின் இளைஞன் இரண்டணாவை எடுத்து வித்தியாசாகரருக்குக் கொடுக்க முன்வந் தான். வித்தியாசாகரர் வணக்கத்துடன் அதனைப் பெற்றுக்கொள்ள மறுத்துத் தம் வழியே சென்றார்.

அடுத்த நாள் அந்தக் கிராமத்தில் பண்டித ஈசுவர சந்திர வித்தியாசாகரரை வரவேற்கப் பெருங் கூட்டம்

கூ டி ற் று. வித்தியாசாகரரின் கீர்த்தியைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த அந்த இளைஞனும் அந்தக் கூட்டத்திற்குச் சென்றான். அப்பெருங் கூட்டத்தின் நடுவே எளிய உடையணிந்த ஒரு மனிதர் நிற்பதை அவன் கண்டான். ஜனங்கள் அவரை வரவேற்று மரியாதை செய்தனர். இளைஞன் அவர் அருகில் சென்று அவரைத் தரிசித்தான். முதல் நாள் தனது பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்த மனிதரே புகழ் பெற்ற ஈசுவரசந்திர வித்தியாசாகரர் என்பதைத் தெரிந்துகொண்டதும் அவன் திடுக்கிட்டான். தான் அவரிடம் கர்வத்துடன் நடந்து கொண்டதை எண்ணி வருந்தினான். கூட்டம் முடிவுற்றதும் அவன் வித்தியாசாகரரிடம் சென்று தனது பிழைக்காக அவரது பாதங்களில் பணிந்து மன்னிப்பு வேண்டினான். அவர் அவனை மன்னித்து நற்புத்தி கூறி அனுப்பினார்.

புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| தகுதி | சுபாவம் | எளியார் |
| தரிசித்தான் | இயன்ற | நவநாகரிகம் |
| கர்வம் | கதியற்ற | மரியாதை |

கேள்விகள்

1. ஈசுவரசந்திரருக்கு என்ன பட்டப் பெயர், எப்படிக் கிடைத்தது?
2. வித்தியாசாகரர் என்ன உத்தியோகம் செய்தார்?
3. வித்தியாசாகரரின் குணங்களைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.
4. இளைஞன் தனது பெட்டியைத் தூக்க ஆள் கிடைக்காததால் என்ன செய்தான்? வித்தியாசாகரர் அவனுக்கு எப்படி உதவினார்?
5. இளைஞன் மறுநாள் கூட்டத்தில் என்ன கண்டான்?
6. இளைஞன் தன் குற்றத்தைத் தெரிந்துகொண்டதும் என்ன செய்தான்?

பயிற்சி

I. பின்வரும் பெயர்ச் சொற்களை (1) பொருள்களின் பெயர், (2) இடங்களின் பெயர், (3) காலங்களின் பெயர் என்று வகைப்படுத்தி எழுது:-

மரம், வங்காளம், யானை, மாதம், மதுரை, பையன், நாள், பூனை, மல்லிகை, நிமிடம்.

II. பின்வரும் வாக்கியங்களில் பெயர்ச் சொற்களுக்குப் பொருத்தமான வினைச் சொற்களை அமைத்து எழுது:-

1. வித்தியாசாகரர் பெட்டியைத்——. (தூக்கு)
2. இளைஞன் தனது குற்றத்தை——. (உணர்)
3. கிராம ஜனங்கள் வித்தியாசாகரருக்கு மரியாதை (செய்)

## 27. உபகாரம் வீண் போகாது

காவனூர் என்ற கிராமத்தில் கோபாலன் என்ற பையன் ஒருவன் இருந்தான். அவன் ஏழை எளியவர்க்கு இரக்கப்பட்டு உதவி செய்யும் குணம் உள்ளவன். ஒரு நாள் அவன் அயலூருக்குப் போக நேர்ந்தது. ஆகையால் அவன் கட்டுச் சோறு எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

வழியில் அவன் ஒரு காட்டைக் கடக்க வேண்டியிருந்தது. அவன் காட்டின் வழியாகச் செல்லும்போது சேறு நிறைந்த ஒரு குட்டையில் குருடன் ஒருவன் விழுந்து தத்தளிப்பதைக் கண்டான். கோபாலன் அவ்வழி போவதைக் குருடன் சத்தத்தால் அறிந்து,

" கண்ணில்லாக் குருடன் ஐயா !
கதியில்லாமல் விழுந்துவிட்டேன்.
புண்ணியவானே நீருமெனைப்
பொறுமையுடனே எடுத்துவிடும்.

" ஐயா ! நான் குருடன். வழி தெரியாமல் இச் சேறு நிறைந்த குட்டையில் விழுந்துவிட்டேன். தயவு செய்து

என்னை இதிலிருந்து கரையேற்றி, பாதையில் விட்டு விடும்,'' என்று வேண்டினான். அதைக் கேட்ட கோபாலன்,

" கண்ணியமுள்ள பெரியவரே !
கருத்துடனே உம்மை விடுவிப்பேன்
எண்ணியபடியே இல்லாமல்
ஐயா யானொரு சிறுபயலே.

" பெரியவரே ! இதோ உம்மைக் கரையேற்றி விடுகிறேன். ஆனால் நீர் எண்ணியபடி நான் பெரிய மனிதனல்ல; சிறு பையன். அடுத்த கிராமத்திற்குச் சென்று, இருட்டுமுன் திரும்ப வேண்டும்,'' என்று கூறிக் குருடனைக் கரையேற்றி, பாதையில் விட்டுச் சென்றான்.

செல்லும்போதே பாதையின் அருகே மயக்கமாய் விழுந்து கிடந்த நொண்டி ஒருவனைக் கண்டான். நொண்டி, பையனைக் கண்டதும்,

" எட்டு நாளாய் உணவில்லாமல்
ஏக்கமுடனே மயங்குகிறேன்
கட்டுச் சோற்றில் சிறிதளித்துக்
காத்திடுவாயோ பையா நீ ?

"பையா! எட்டு நாளாய் உணவில்லாமல் இவ்விடத்திலேயே கிடக்கின்றேன். தயவு செய்து உனது கட்டுச் சோற்றில் சிறிது கொடுத்து என்னைக் காப்பாற்று,'' என்று கெஞ்சினான். இதைக் கேட்ட கோபாலன்,

" திட்டமுடன் இச்சோற்றினையே
தின்று பசியைத் தீர்த்துக்கொள்ளும்
கஷ்டத்துடனே ஊர் சென்று
கருத்துடன் திரும்புவேன் விரைவாக.

"ஐயா! இக் கட்டுச்சோற்றை நீர் சாப்பிடும். நான் அயலூர் சென்று சீக்கிரம் இருட்டுமுன் திரும்ப

வேண்டும்,'' என்று கூறிக் கட்டுச்சோற்றைக் கொடுத்துச் சென்றுன்.

ஆனுல் கோபாலன் திரும்பி வரும்போது நடுக் காட்டில் பொழுது இருட்டி விட்டது. வழியில் அவன் பாடிக் கொண்டே வந்தான். இரண்டு திருடர்கள் அவனைத் தடுத்து நிறுத்திஞர்கள். அப்பொழுது,



" வாருங்கள் வாருங்கள் சீக்கிரமே!
வந்திதோ இருக்கிற திருடர்களைப்
பாருங்கள், பிடியுங்கள், கட்டுங்கள்
பாவத் தொழில்செய்யும் கள்வர்களை.

"வாருங்கள், சீக்கிரம் வாருங்கள்! இதோ இருக்கும் திருடர்களைப் பிடியுங்கள்; கட்டுங்கள்; அடியுங்கள்," என்ற சத்தம் கேட்டது. இதைக் கேட்ட திருடர்கள் ஓடிவிட்டனர். முன்பு கோபாலன் உபகாரம் செய்த நொண்டி, குருடன்மேல் ஏறிக்கொண்டு, இருவரும் சத்தமிட்டுக்கொண்டே வந்தார்கள். அவர்களைக் கண்டதும் கோபாலன்,

" ஐயன்மீர் உங்கள் உதவியினால்
ஆபத்திலிருந்து தப்பிவிட்டேன்
மெய்யாகவே நீங்கள் வாராவிடில்
மேன்மேலும் ஏதேது செய்வார்களோ?

"ஐயன்மீர்! நீங்கள் சமயத்தில் வந்தீர்கள். இல்லா விட்டால் அத்திருடர்கள் என்னை அடித்துக் கஷ்டப் படுத்தியிருப்பார்கள். உங்களுக்கு மிகவும் வந்தனம்!" என்று கூறினான். அதற்குள் அவர்கள்,

" பையனே உன் ஆபத்தினைப்
பார்த்ததுமே நாங்கள் ஓடிவந்தோம்
செய்யும் உபகாரம் ஒருநாளும்
சேதமாகாது தெரிந்து கொள்வாய்.

"பையா! உன் குரலைக்கேட்டு, உன் ஆபத்தை அறிந்து சத்தமிட்டுக் கொண்டே ஓடி வந்தோம். அதனால் திருடர்கள் ஓடிவிட்டனர். நீ இன்று எங்களுக்கு உபகாரம் செய்ததனால் உன் குரலைத் தெரிந்து கொண்டோம். ஆகையால் ஒருவருக்கு உபகாரம் செய்தால் அது என்றும் வீண்போகாது," என்று கூறிச் சென்றனர். கோபாலனும் சௌக்கியமாய் வீடு சேர்ந்தான்.

புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| பாவத்தொழில் | கண்ணியம் | கெஞ்சு | கடக்க |
| சௌக்கியம் | உபகாரம் | மயக்கம் | வந்தனம் |
| கஷ்டப்படுத்து | ஆபத்து | ஏக்கம் | சேதம் |

கேள்விகள்

1. கோபாலன் யார் யாருக்கு உபகாரம் செய்தான்? அவர்களால் கோபாலனுக்கு எந்த விதத்தில் பிரதியுபகாரம் செய்ய முடிந்தது?
2. இப்பாடத்தினால் நீ கற்றுக்கொண்ட நீதி என்ன?

பயிற்சி

I. பின்வரும் வார்த்தைகளைத் தகுந்த வாக்கியங்களில் அமை:-

இரக்கம், அன்பு, தத்தளி, வழிதெரியாமல், கரையேற்றி, திருடர்கள், தப்பிவிட்டேன்.

II. இப்பாடத்திலுள்ள பெயர்ச் சொற்களில் நான்கும் வினைச் சொற்களில் நான்கும் எடுத்து எழுது. அவற்றின் எண்களைக் கூறு.

## 28. பாதுஷாவின் நேர்மை

ஜஹாங்கீர் அக்பர் பாதுஷாவின் புதல்வர். அவர் தமது குடிகளை மிக்க அன்புடன் நடத்தி, நீதி தவறாது செங்கோல் செலுத்தி வந்தார். குடிகளின் குறைகளைக் கேட்டறிவதற்காக அவர் தமது அரண்மனையில் பெரிய மணி ஒன்று அமைத்தார். அதன் கயிறு அரண்மனையில் வெளிப்புறக் கதவில் கட்டியிருந்தது. குடிகளில் எவருக்கேனும் துன்பம் நேர்ந்தால் அந்தக் கயிற்றை இழுத்து மணியை அடிப்பது வழக்கம். பாதுஷா, மணியின் ஒலியைக் கேட்டு மணியடித்தவரைத் தர்பாருக்கு வரவழைத்து விசாரிப்பார்.

ஒரு நாள் ஓர் ஏழைப் பெண் அந்த மணியை அடித்தாள். பாதுஷா அச்சமயம் அரண்மனையினுள்ளே தம் ராணியுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். மணி ஒலியைக் கேட்டதும் அவர் மணியடித்தவரைத் தர்பாருக்கு அழைத்து வரும்படி கட்டளையிட்டார். ஏழைப்பெண் பாதுஷாவின் எதிரில் வந்தாள். அவளை விசாரித்ததில், கோட்டையினுள்ளிருந்து வெளிவந்த ஒரு குண்டு பட்டு அவளுடைய கணவன் கொல்லப்பட்டதாகத் தெரியவந்தது. உடனே பாதுஷா குண்டு போட்டவர் யாரெனக் கண்டுபிடிக்க உத்தரவிட்டார்.

ஜஹாங்கீரின் பெரிய ராணியான நூர்ஜஹான் குண்டு போட்டதாகச் செய்தி கிடைத்தது. தர்பாரில்

கூடியிருந்தவர்கள் இதைக் கேட்டு, நீதிக்குப் பெயர் பெற்ற ஜஹாங்கீர் அளிக்கப்போகும் தீர்ப்பை ஆவலு டன் எதிர்பார்த்தார்கள். உடனே ஜஹாங்கீர் ஒரு துப் பாக்கியை வரவழைத்து அதைக் குண்டுகளால் நிரப்பி ஞர். பிறகு அதை அந்த ஏழைப் பெண்ணிடம் கொடுத்து, "நமது நீதியின்படி, கொலைக்குப் பதில் கொலைதான். என் மனைவி உன் கணவனைக் கொன்று உன்னை விதவையாக்கினுள். ஆகவே நீயும் அவளது கணவனைக் கொன்று அவளைக் கைம்பெண்ணுக்கு. அவளது கணவனுன நான் இதோ உன் முன்னுல் நிற் கின்றேன்," என்ருர்.

சபையோர் மிக்க ஆச்சரியமடைந்தனர். அந்த ஏழைப்பெண், "நான் இவ்விதம் பழிவாங்க விரும்ப வில்லை. நான் தங்களது மனைவியை மன்னித்துவிட் டேன்," என்று கூறினுள். பாதுஷாவும் அவளைப் பாராட்டித் தமது மனைவி நூர்ஜஹானுக்குக் கொடுத் திருந்த கிராமங்களில் பாதியை அந்த ஏழைப் பெண்ணுக்கு ஜாகீராகக் கொடுத்தார். ஜஹாங்கீரின் நேர்மையைக் குடிகள் எல்லாரும் புகழ்ந்தார்கள்.

### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| பாதுஷா | தர்பார் | கைம்பெண் |
| தீர்ப்பு | பழிவாங்கு | விதவை |
| ஜாகீர் | அரண்மனை | கட்டளை |

### கேள்விகள்

1. ஜஹாங்கீரின் அரண்மனையில் பெரிய மணி எதற்காக அமைக்கப்பட்டிருந்தது?
2. அரண்மனை மணியை ஏழைப்பெண் ஏன் அடித்தாள்?
8. பாதுஷா, ஏழைப் பெண்ணுக்கு எப்படி நியாயம் வழங்கினுர்?

### பயிற்சி

பின் வரும் சொற்களுக்கு எதிரான பொருளுடைய சொற்களை எழுது:—

வெளிப்புறம்; முன்னே; புகழ்ந்தார்கள்; நியாயம்.

# 29. கொன்றை வேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
கிட்டாதாயின் வெட்டென மற.
கீழோர் ஆயினும் தாழ உரை.
கெடுவது செய்யின் விடுவது கருமம்.
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.
திரைகட லோடியுந் திரவியந் தேடு.
தெய்வஞ் சீறின் கைதவ மாளும்.
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
நூல்முறை தெரிந்து சீலத் தொழுகு.
மாரி அல்லது காரியம் இல்லை.
மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
வீரன் கேண்மை கூரம்பாகும்.
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
கோள்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தீராக் கோபம் போராய் முடியும்.
தோழ னோடும் ஏழைமை பேசேல்.
நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்.
நீரகம் பொருந்திய ஊரகத் திரு.
நெஞ்சை ஒளித்தொரு வஞ்சக மில்லை.
நைபவ ரெனினும் நொய்ய உரையேல்.
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
பாலோ டாயினும் காலம் அறிந்துண்.
புலையும் கொலையும் களவும் தவிர்.
பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்.
மருந்தே ஆயினும் விருந்தோ டுண்.
ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு.
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை.
வையந் தோறும் தெய்வம் தொழு.

# 30. வெற்றிவேற்கை

### ஆசான்

எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.

### அழகு

கல்விக் கழகு கசடற மொழிதல்.
செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்.
மன்னர்க் கழகு செங்கோன் முறைமை.
வணிகர்க் கழகு வளர்பொரு ளீட்டல்.
உழவர்க் கழகு ஏர் உழுதூண் விரும்பல்.
மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
தந்திரிக் கழகு தறுக ணாண்மை.
உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
பெண்டிர்க் கழகு எதிர் பேசா திருத்தல்.
அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

### பெருமை சிறுமை

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும், அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்.
சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.
கற்றோரெல்லாம் அறிஞரும் அல்லர்.
பெருமையும் சிறுமையும் தான் தரவருமே.

## நட்பு

அடினும் ஆவின்பால் தன்சுவை குன்ருது.
சுடினும் செம்பொன் தன்ஞெளி கெடாது.
அரைக்கினும் சந்தனம் தன்மணம் அருது.
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
கலக்கினும் தண்கடல் சேரு காது. [காய்
அடினும் பால்பெய்து கைப்பருது பேய்ச்சுரைக்
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாது

**ஆதலால்.**

ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

## பிழை பொறுத்தல்

சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே.
சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.